# வணக்கவொளி

## புலத்தமிழ் காலாண்டிதழ்

இதழ்–3 VANAKKAVOLZI ஆடி 2012



வீண்போகாத் தியாகங்களும்

உயிர்பெறும் உண்மைகளும்

மனிதர்களாகும் மிருகங்களும்

மிருகங்களாகும் மனிதர்களும்

முள்ளியின் மூன்றாண்டு...

நெஞ்சைப் பிழியும்

போராளிகளின் நினைவுகள்

வணக்கவொளி பரவ, அறிவொளி பரவும்

RTM

ஆர்.ரி.எம் பிறதர்ஸ்

[illegible]

**30.09.2012**

**ஞாயிற்றுக்கிழமை 14h00**

# 20வது கலைத்தென்றல்



பாரிசில் பெறுமதி மிக்க
பரிசில்களை வழங்கி
பாடும் திறன் கொண்டவர்களை
அரங்கேற்றி பெருமைப்படுத்தும்
நிகழ்வாக இடம்பெறுகிறது

பாட்டுத்திறன் போட்டி

# 9வது இசைபாடும் இரவு

30 போட்டியாளர்கள் கலந்துகொள்ளும் விறுவிறுப்பான போட்டி

நகைச்சுவை
மேலைத்தேய நடனம்
கலைஞர், வர்த்தகர் கௌரவிப்பு
முதன்முறையாக புழுகுப்போட்டி




**50 Rue de Torcy**
**métro : Marx Dormoy**

# முள்ளியின் மூன்றாண்டு



முள்ளிவாய்க்கால் எம்மினத்தை கொள்ளியிட்டநாள்
பள்ளிச் சிறார் துள்ளிச் சிதறித் துடித்தநாள்
வெள்ளி முளைக்கு முன் வெடிகுண்டுச் சிதறலிலே முற்றாகப்
பள்ளிகொண்ட கரும்புள்ளிக் கண்ணீர் நாள்
புத்தாண்டுகள் எமக்குப் புரையிட்டுப் போனநாள்
புத்தாண்டு கடந்தாலும் பாவியர் நாம் பட்டபாட்டை மறப்போமா?
கொத்தாகப் போட்டுக் குலை குலையாய் கொலை வெறியாடிய கொடூரம்
கண்முன்னே பித்தாக நாம் பிதற்றி அலையும் பேறு பெற்றபின்
பீதியோடு நாளைப்போக்கும் நாதியற்ற எம்மினத்தின் முத்துக்கள்
சிதறி முடிவில்லா சிறைகளிலோ
முட்டி மோதி மொட்டுக்கள் முதிர்ந்த நிலையில்
வித்துக்கள் வெட்டுண்டு வீழ்ந்தபின்
விடியுமா ஆண்டு வீழ்ந்திடுமா எம்மினம்
கத்திக் கதறிக் கண்முன்னே கன்னியவள்
கற்பைச் சூறையாடி கருகிப்போன அந்தச்
சிட்டுச் சிறுமிகளின் கடைசி மரண ஓலம்
சிதைக்கும் எம் நெஞ்சுக்குள் சிதைமூட்டுகிறதே
கதையாய் பலருக்குக் கனவாய்ப் போயிருக்கலாம்
கல்லாய் சமைந்து போகக் கற்பனையா இவை
கண்ணில்லாக் கடவுளே! கல்லாகவே நீ இருந்துவிடு.

கவிதை: திருமதி.ஜனகா ஜெகநாதன்

# வணக்க ஒளியினிலே

முள்ளியின் மூன்றாண்டு
வணக்கவொளியின் வணக்கம்
உலகப் புத்தக தினம் சித்திரை 23
வீண்போகாத் தியாகங்களும் உயிர்பெறும்...
எதியோப்பியா கரியாகும் காடுகள்!
உங்கள் கனவுகள் நிறைவேற...
நெஞ்சைப்பிழியும் போராளிகளின் நினைவுகள்
என்னம்மா சாப்பாடு
மனிதர்களாகும் மிருகங்களும்...
ஐயோ கடவுளே!
வாத்தியாரும் கழுதையும்
மாரடைப்பு வியாதி வராமல்...
வளர்ந்து வரும் தமிழ்க்கால்பந்தாட்ட...
நேசமுள்ள வாசகர்கள்
சுவையான செய்திகள்
அயற்சொல் — தனித்தமிழ்
ஊக்குவித்தல் என்னும் மந்திர சாவி!
'அ' க்களும் 'மு' க்களும்
ஈழத்து நாட்டார் பாடல்கள்
நாமார்க்கும் குடியல்லோம்
புதிய தேடல்கள்
என் இனிய தமிழ்மக்களே!
சிறுவர் வளர்ப்பில் சிறப்பான...
கட்டிளமைப்பருவத்தில் ஏற்படும்...
மதத்தினுள் மறைந்திருக்கும்...
வெளிநாட்டு வியாபாரமும்...
வாழ வழி விடுவோம்
நம்ம ஊரு நல்ல ஊரு
இசையின் எல்லையை...

**ஆசிரியர்**
வி.பாஸ்கரன்

**இதழ் வடிவமைப்பு**
து.பிரபாகரன்

**கணனி எழுத்து**
பா.ஜெயராணி

**இணை ஆசிரியர்**
வி.மோகனதாசன்

**தொடர்புகட்கு**
வணக்கவொளிக் குழுமம்
vanakkavoli@yahoo.fr

# வணக்க ஒளியின் வணக்கம்

வி.பாஸ்கரன்
"வணக்கவொளி" குழுமம்

ஒரு பிரெஞ்சுக்காரருக்கு தனது நாட்டின் செய்திகளை அறிந்தாலே திருப்திப்பட்டு விடலாம். ஆனால் புலம்பெயர்ந்த தமிழர்களைப் பொறுத்த வரையில் தாயக, வாழிட நாடுகளின் செய்திகளை அறிந்தால்தான் மனம் திருப்திப்படும். நாங்கள் ஒவ்வொருவரும் இரட்டை வாழ்க்கை வாழும் இரட்டை மனிதர்கள். ஒரு நாளில் நாம் தாயகத்தைப் பற்றியும் சிந்திப்போம், வாழும் நாட்டைப் பற்றியும் சிந்திப்போம். எமது வாழ்க்கையானது இந்த இரு நாடுகளுக்கிடையே சிக்குப்பட்டுப் போயிருக்கின்றது.

இலங்கையில் வாழ்ந்த போதும் நாம் சுதந்திரமான மனிதர்களாக, பாதுகாப்புள்ள மனிதர்களாக வாழவில்லை. இலங்கை இராணுவத்தின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளானவர்களாகவே வாழ்ந்தோம். வாழிடத்திலும் எமது வீடுகளின் கதவைப் பூட்டி விட்டு நடந்தால் திருட்டுப்போய் விடுமோவென அஞ்சும் வேளையில் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடக்கவேண்டியதாயிருக்கின்றது. எங்களைத் திருடர்கள் பின்தொடர்ந்து பணத்தை, நகையை பறிப்பார்களென அஞ்சவேண்டியிருக்கின்றது. அங்கு இராணுவத்தோடு போராடினோம். இங்கு திருடர்களோடு போராட வேண்டியதாயிருக்கின்றது.

இலங்கை அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையில் தமிழர்களது கல்வி, பொருளாதார முன்னேற்றங்களை சகித்துக் கொள்ள முடியாமலேயே இன ஒடுக்கல்களை மேற்கொண்டது.

நாம் வாழும் ஐரோப்பிய நாடுகள் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டைக் கடைபிடிக்கும் நாடுகள். எமது திறமை, உழைப்பைக்கொண்டு நாம் முன்னேறலாம்.

ஒரு வாகனத்தின் சக்கரங்களை நாம் முன்னோக்கிச் செலுத்தும் போது அவ்வாகனம் முன்நகர்வது போல் எமது சமூகத்தின் கடின உழைப்பு, சேமிக்கும் திறன் என்பவை எமது சமூகத்தை முன்னோக்கி நகர்த்தி வருகின்றது.

எம்மை நாமே மதிப்பீடு செய்வதை விட வாழிட நாடுகளில் வாழும் ஏனைய சமூகங்கள் எம்மை எப்படி மதிப்பீடு செய்கின்றதென்பது ஒரு பெறுமதியான மதிப்பீடாக இருக்கும். மாலி நாட்டைச்சேர்ந்த ஒருவர் எமது சமூகத்தைப்பற்றி பேசும் போது மாலிநாட்டவர்கள் உங்களோடு ஒப்பிடுகையில் பல நூறு ஆண்டுகளுக்கு முன் பிரான்சிற்குப் புலம்பெயர்ந்தவர்கள். கால்நடையாகப் பிரான்சுக்கு வந்தவர்களும் அடங்குவர். ஆனால் பொருளாதார ரீதியில் குறிப்பிடக்கூடிய அளவு முன்னேற்றம் ஏதுமில்லை. ஆனால் நீங்களோ குறைந்த காலப்பகுதியில் கூடியளவு முன்னேற்றங்களைப் பெற்றிருக்கிறீர்கள். இது எமது சமூகத்தவர்களுக்காக நாங்களே கைகளைத் தட்டிப் பாராட்டக்கூடிய ஒன்றுதான்.

கொஸ்ரிக்கா நாட்டைச்சேர்ந்த ஒருவர் எமது சமூகம்பற்றிப் பேசும்போது பிரான்சில் சீனர்களுக்கு அடுத்ததாகத் தமிழர்கள் வர்த்தகத்தில் முன்னேறி வருவதாகச் சொன்னார். இவையெல்லாம் வரவேற்கக்கூடிய ஒன்றுதான்.

பிரான்சின் குடியேற்ற ஆதிக்கத்திற்குட்பட்ட மாலி செனகல், கொஸ்த்திரிக்கா போன்ற பல நாட்டவர்கள் பிரான்சில் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் மத்தியில் ஆசிய நாட்டவர்கள் பிரான்சிற்குள் வந்து தமது வேலை வாய்ப்புக்களை அபகரித்துக் கொண்டார்களென்ற அபிப்பிராயம் உண்டு. ஆனால் இவர்கள் எல்லோரும் தொழில் செய்து வாழும்

கண்ணியமான ஆபிரிக்கர்கள். ஆனால் இவர்களிடம் இன்னொரு அபிப்பிராயம் உண்டு. இந்துக்கள் வசதியாக வாழ்கின்றார்கள். இவர்கள் அணிவதெல்லாம் பொன் நகைகள் பணமும் உண்டு. விலைகூடிய கைத்தொலைபேசிகளும் உண்டென்பதாகும். நாம் ஒன்றாக கூடும் இடங்களில் வேறு நாட்டவர்களைப் பற்றி பேசுவது போன்று இவர்களும் எம்மைபற்றி பேசுவார்களென்பது மனித இயல்பு.

ஆபிரிக்க மக்களோடு பழகும் போது, வெளிஇடங்களில் மற்றவர்களுக்கு உதவுவதை அவதானிக்கும்போது மனித நேயமுள்ளவர்களென்பதையும் கண்டுகொண்டோம்.

அண்மைக்காலத்தில் தமிழ்ப்பெண்களிடம் கழுத்துத் தாலிக் கொடிகளை, சங்கிலிகளை அறுத்தெடுத்தல் காதுதோட்டை பிடுங்கியெடுத்தல், கைமோதிரத்தை உருவிக் களற்றியெடுத்தல் போன்ற திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இது பற்றி மாலி, கொஸ்திரிக்கா நாடுகளைச் சேர்ந்தவர்களிடம் கேட்டபோது, இங்கு பிறந்து வளர்ந்த இளைஞர்கள்தான் திருடுகின்றார்கள். ஆபிரிக்காவிலிருந்து வந்தவர்கள் திருடமாட்டார்கள். நமது நாட்டில் திருடினால் ஊரே கூடித் தண்டனை வழங்குவோம். இங்கு தவறு செய்யும் எமது குழந்தைகளைத்தண்டிப்பதற்கு எமக்கு அனுமதியில்லை. நாம்தண்டித்தால் பிரான்ஸ் அரசாங்கத்தால் சிறையில் அடைத்துத் தண்டிக்கப்படுவோம் என்றார்கள். இங்கு பிறந்து வளர்ந்த இளைஞர்கள் திருடுவதற்கு இதுவும் ஒரு காரணமாகயிருக்கலாம். ஆனால் இதுவொரு முழுமையான காரணமாக இருந்து விடமுடியாது.

நாம் ஆபிரிக்க நாட்டவர்களோடு பழகும்போது இன்னொன்றையும் அறியக்கூடியதாக இருந்தது. பல ஆபிரிக்கர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பல பெண்களோடு சேர்ந்து வாழ்கின்றார்கள். இவர்களுக்கு பல குழந்தைகள் உண்டு. இவர்களில் ஒரு ஆண் நான்கு பெண்களை மணக்கலாம் என்பது ஆபிரிக்காவிற்கு பொருத்தமாக இருக்கலாம். ஆனால் பிரான்சை பொறுத்தவரையில் நெருக்கடிகளைச் சந்திகிறார்கள். ஆபிரிக்காவில் பெரிய நிலங்கள் இருப்பதால் பிள்ளைகள் வெளியில் சென்று விளையாடிவிட்டு வீட்டுக்கு வருவார்களென அவர்களே கூறுகின்றார்கள். இங்கு பெரிய கட்டிடத்தொடரிலுள்ள சிறிய வீடுகளில் பிள்ளைகள் அடைபட்டுப் போயிருக்கின்றார்கள். பெற்றோர்களால் எல்லாப் பிள்ளைகளுக்குமான நல்ல கல்வியையோ, நல்ல ஆடைகளையோ, நேர்த்தியான வழிநடத்தல்களையோ வழங்க முடியவில்லை. இவர்களில் ஒழுங்கான கல்வியை கற்று நற்குடிகளாக வருபவர்களும் இருக்கின்றார்கள். திருடர்களாக வருபவர்களும் இருக்கின்றார்கள்.

இத்தகைய திருடர்களினால்தான் நாம் தற்போது பிரான்சில் பாதுகாப்பற்று வாழ்வதை உணர்ந்து வருகின்றோம். நகை திருட்டுகளைப்பற்றி காவல்துறையினரிடம் முறையிட்ட பொழுது நீங்கள் நகைகளை அணிவதால்தான் ஆபத்துக்களுக்கு உள்ளாகுகிறீர்கள் என்பதுதான் பதிலாக இருக்கின்றது. நாம் திருடுபவர்களின் பின்னணியையும் காவல்துறையினரின் பதிலையும் வைத்துக்கொண்டு நாம் கழுத்தில் அணியும் நகை முக்கியமா? அல்லது கழுத்து முக்கியமா? என்ற முடிவுக்கு வந்தால்தான் எம்மை நாம் பாதுகாக்கலாம். எம்மை நாம்தான் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் எமது வாழிட அனுபவங்களிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய உண்மையாகும்.

எமது சமூகத்திற்கான இதழ் ஒன்றை வெளியிடும் பொழுது எமது சமூகம் எதிர் நோக்கும் பிரச்சினைகளை கவனத்தில் கொள்வது எமது கடமையாகும்.

நாம் மூன்றாவது இதழை உங்கள் கைகளில் தருகின்றோம். எமது வேலை நெருக்கடிகளில் நேரமின்மை ஒரு தொல்லை தான். ஆனாலும் நேரத்தை திட்டமிட்டு, செயல்படுவதன் மூலமாக இதழை வெளியில் கொண்டு வருகின்றோம். எம்மை நம்பியவர்களை கைவிடக்கூடாதென்ற மனச்சாட்சியின் உறு

த்தல்தான் நம்மை இயங்க வைக்கின்றது. எம்மை ஊக்குவிப்பவர்களை நன்றியோடு இவ்விதழில் பதிவு செய்து கொள்ள விரும்புகின்றோம். சிறீமகால் உரிமையாளர், ஓசியன் இந்தியன் உரிமையாளர், எம்மிடம் சந்தாபெற்றிருப்பவர்கள், எமது இதழை வாங்குபவர்கள் இவர்களின் ஊக்குவிப்புத்தான் இவ்விதழியல் தளத்தில் எம்மை இயங்கவைக்கிறதென்பதை நன்றியுணர்வோடு மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்க்கின்றோம். நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் ஒரு சிறிய உதவி, உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கும் வணக்கவொளியை அறிமுகப்படுத்தி சந்தா தாரராக இணைய வையுங்கள். இதழை வாங்கி வாசிக்க வையுங்கள்.

**மீண்டும் அடுத்த இதழில்...**

# உலகப் புத்தக தினம் சித்திரை 23

**மீ. கே மனோகரன்**

ஐக்கிய நாடுகள் சபை ஏப்பிரல் 23 ஆம் தேதியை 'உலகப் புத்தக தினம்' என அறிவித்துள்ளது. மேலும் இந்த நூற்றாண்டின் முதல் ஆண்டாகிய 2001-ஐ உலகப் புத்தக ஆண்டாக அறிவித்தது. இந்திய அரசும் 2001 ஆம் ஆண்டினை உலக புத்தக ஆண்டாக அறிவித்து வாசிக்கும் பழக்கம் அதிகரிக்கவும் நூலகப் பயன், நூலக அறிவு அனைவருக்கும் கிடைத்திடவும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

நமக்குத் தேவையான பலவற்றுள் முக்கியமான ஒன்று புத்தகங்கள். நல்ல நூல்களே உற்ற நண்பர்கள். மற்ற உயிரினங்களின் வாழ்க்கையில் தலைமுறைகள் மாறினாலும் வாழ்க்கை முறைகள் மாறாமல், தொடங்கிய இடத்திலிருந்தே மீண்டும் மீண்டும் தொடங்குகிறது. ஆனால் மனிதனின் வாழ்க்கை மட்டும்தான் ஒரு தலைமுறை விட்ட இடத்திலிருந்து அடுத்த தலைமுறை வாழ்க்கையைத் தொடங்குகிறது. மனிதன் தன்னுடைய வாழ்க்கையை வரலாறாக நூல்களில் பதிவு செய்து செல்வதன் காரணமாகத்தான் இது சாத்தியமாகிறது.

வாசிப்பது ஓர் அற்புத அனுபவம். அது புதியதொரு உலகைத்திறந்து காட்டும். பல புதிய, அரிய தகவல்களையும் தரும். பல புத்தகங்கள் உலகை உலுக்கியுள்ளன. புத்தகங்கள் பல்வேறு உலகங்களை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன. வாசிப்பு மனதை ஒருமுகப்படுத்தி, நினைவுத்திறனை அதிகரிக்கிறது. படிப்பவர்களின் கற்பனையையும், அறிவையும் புத்தகம் வளர்க்கிறது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் போலவோ, காட்சி ஊடகங்களைப் போலவோ இதில் வருபவை ஒரு முறையுடன் மறைந்துவிடுவதில்லை. புத்தகம் அது பதிப்பிக்கப்பட்ட காலத்தையும் தாண்டிப் புதிய புதிய அர்த்தங்களைத் தந்து கொண்டே இருக்கும். வாசிப்பு என்பதைக் குழந்தைப் பருவத்திலேயே தொடங்கி விடுகிறது. பெற்றோர்களின் முகபாவனைகளையும், கையசைவுகளையும் வாசிக்கிறது.

குழந்தை நாம் பேசுவதைக் கேட்டு மொழியின் ஒலிகளைக் அறிந்து கொள்ளுகிறது. புதுவார்த்தைகளையும், அவை சுட்டும் அர்த்தங்களையும் புரிந்துகொள்கிறது. இப்பருவத்திலேயே குழந்தையிடம் பேசுவதும், பாடுவதும் சிரிப்பதும், கண்ணாம்பூச்சி ஆடுவதும், இன்ன பிறவும் குழந்தையின் இயல்பான அறிவுப் பசிக்குத் தீனிபோடுகின்றன.

வாசிப்புத் திறன் உயர்வதால் எதிலும் ஆழ்ந்து கவனம் செலுத்துவது இயல்பாகிறது. வாசிக்கக் கிடைக்கும் பரந்துபட்ட அனுபவங்களும் எண்ணங்களும், இதுவரை அறிந்தவற்றின் எல்லை

களை விரிக்கின்றன. மேலும் சிந்திக்க வைக்கி ன்றன. புதிய தகவல்களை எளிதில் கிரகிக்க முடிகிறது. சிக்கலான தகவல்களை வகைப்ப டுத்தி, தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்துப் பகுத்துப்புரிந்து கொள்ள முடிகிறது. வாசிப்புத் திறன் பிறதிறன்களையும் வளர்க்கிறது. தாமே வாசிக்கையில்தான் ஒரு புத்தகத்தின் முழுச் சக்தியையும் உணர்ந்து கொள்ளமுடியும். நேரி ல் காணாத காட்சிகளும் முகர்ந்திராத மண ங்களும், கேட்டிராத ஒலிகளும் பிடிபடுகின்றன. சந்திக்காத மக்கள் அறிமுகமாகிறார்கள். கற்ப னையே செய்திராத வாழ்க்கைப் பார்வைகளும், சிந்தனைகளும் பரிச்சயமாகின்றன. ஒரே ஒரு பார்வை என்றில்லாமல் பல பார்வைகள் கொ ண்ட, பல சாத்தியங்கள் உள்ள பெரிய உலகம் சொந்தமாகின்றன.

ஆழ்ந்து வாசிக்கும் அந்த அற்புதக் கணத்தில், எழுதப்பட்ட பக்கங்களினுள் விரியும் புதிய உல கங்கள் நம்முடன் உறவாடுகின்றன. எல்லைக ளை விரிக்கின்றன. இந்தப் புத்தக உலகங்களி ல் மூழ்குவதால், நாம் மிகுந்த உண்மையுள்ள வராகவோ, மிகுந்த அறிவுள்ளவராகவோ, இதர உயரிய குணாம்சங்கள் உள்ளவராகவோ மாறு வோம் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல் லை. ஏதாவது ஒரு நிலையில் நமது தற்போதை ய நிலையிலிருந்து உயர வேண்டும் என்ற அழு த்தமான ஆசை ஆழ்மனதில் பீறிடும். இத்த கைய அரிய சந்தர்ப்பங்கள் நம் வாழ்வை வளப் படுத்தும். ஆழ்ந்து வாசிப்போம், வாசிக்க வாய்ப் பு அதிகம் இல்லாதவர்களையும் வாசிக்க ஊக் குவிப்போம். நம்புவதற்காகவோ, ஒதுக்குவதற் காகவோ, ஏற்பதற்காகவோ, மறுதலிப்பதற்காக வோ, விரும்புவதற்காகவோ, விவாதிப்பதற்காக வோ, பட்டத்திற்காகவோ, பதவிக்காகவோ மட் டும் அல்ல, மானுடத்தின் பகிர்தலுக்காக அது நம்முள் ஏற்றி வைக்கும் ஒளிச்சுடருக்காகவும் வாசிப்போம். பாடப் புத்தகங்களை படிப்பது பெ ரும்பாலும் திறமையை வெளிக்காட்டவும், அதிக மதிப்பெண் எடுக்கவும்தான். ஆனால் நூலகக்கல்வி வாழ்க்கைமுறை ஒழுக்கநெறி முறைகள் குறித்த பல அறிஞர்களின் கருத்துக் களை நமக்குப் பல அரிய நூல்கள் மூலம் வழ ங்குகிறது. ஒரு மனிதனின் வாழ்க்கையை மாற் றி அமைப்பது அவனது குணநலன்களே அந்த குணநலன்களை நிர்ணயம் செய்வதில் பெரும்ப ங்கு வகிப்பது புத்தங்களே. ஒரு மாணவன் பாடநூல்களோடு நூலகம் சென்று பிற நூல்க ள், மாத இதழ்கள், நாளிதழ்கள் ஆகியவற்றை க் கற்று வரும் நிலையை மேற்கொண்டால் கண்டிப்பாக அந்த மாணவர் ஒரு வெற்றி மாண வராக பல்துறை அறிவுடைய மாணவராக, வாழ் க்கை யை எதிர்நோக்கும் உறுதி படைத்தவராக வளர்ச்சி அடைய முடியும் என்பது உறுதி. வள ர்ச்சி என்பது படிப்படியாக நிகழக்கூடியது ஒன் று. ஒரு தாவரம் முறையாக பராமரிக்கப்பட்டு வந்தால் நல்ல முறையில் வளர்ந்து பலன் கொடுக்கும். அது போல மாணவர்களின் வளர் ச்சியும் சீராக ஒழுங்காக அமையவேண்டுமெ னில் நல்ல நூல்களை படிப்பதை தினசரி வேலையாக மாற்றிட வேண்டும்.

'நவில் தொறும் நூல்நயம்' போலும் என்றார் திருவள்ளுவர். நயமான நூல்கள் தரும் இன்பத் தை ஒரே இடத்தில் அளிப்பது நூல்நிலையமா கும். தேசிய நூலக வார விழா ஆண்டுதோறும் நவம்பர் 14ஆம் திகதி முதல் நவம்பர் 20ஆம் திகதி வரை இந்தியாவெங்கும் கொண்டாடப்படு கிறது. உலகிலேயே நூலகத்திற்கு என ஒரு வார காலம் விழா நடத்துவது இந்தியாவில் மட் டும்தான். பள்ளியில் படிக்கும் நூல்களால் மட்டும் மாணவர் பரந்த அறிவைப் பெற்றுவிட முடியாது. நூல் நிலையத்திலுள்ள இலக்கியம், வரலாறு, அறிவியல் முதலான பலதுறை நூல்களை எடுத்துப் படித்து மாணவர்தம் பொது அறிவைப்பெருக்கிக்கொள்ள வேண்டும். நாள் தோறும் ஐம்பது பக்கங்களாவது படித்து விட்டுத் தான் படுக்கச் செல்வது என்ற ஒரு முறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

# சொல்லக் கொஞ்ச விசயங்கள்

## வீண்போகாத்தியாகங்களும், உயிர்பெறும் உண்மைகளும்

வி. மோகனதாசன்

சிறிலங்கா அரசு பயங்கரவாதத்துக்கு எதிரான போர் எனக்கூறி சர்வதேச ஆதரவினைப் பெற்று தமிழினவழிப்புக் கொடும்போரைப் புரிந்து பல இலட்சக்கணக்கான தமிழ்மக்களை கொன்றொழித்தது. இந்த நூற்றாண்டின் மாபெரும் இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவடைந்ததைப் பெரும்துயரோடு நினைவுகூர்ந்து கொண்டு இருக்கும் இந்தத் தருணத்தில் இதனை எழுதிக்கொண்டிருக்கிறேன். இரத்தச்சகதியில் நம்சகோதரர்களின் பிணக்குவியல்களையும், பிய்தெறியப்பட்ட உடலங்களையும் கண்டு நெஞ்சம் பதறிய நாட்களையும் போரை நிறுத்தச் சொல்லி உலகவீதிகளில் நின்று கதறிய நாட்களையும் உயிருள்ள வரை தமிழர் எவரேனும் மறக்கவியலாது.

தமிழினவழிப்பு நடவடிக்கையினூடாக தமிழரின் அரசியல் விடுதலைப் போராட்டத்தையும் சேர்த்துப் புதைத்துவிட்டதாகக் கனவுகண்டு கொண்டிருந்தது சிறிலங்கா பேரினவாத அரசு. ஈகங்களால் நிறைந்த மண்ணில் உரிமைக்காகப் போராடியவர்களின் உதிரங்களால் நனைந்த பூமியில் தாயகக்கனவைப் புதைத்துவிட முடியுமா? அவர்களது உணர்வுகளைச் சிதைத்துவிட முடியுமா? சிங்கள அரசின் உறக்கத்தைக் கெடுக்கும் கொடும் கனவாக ஐ.நா மனிதவுரிமைகள் தீர்மானம் உலுக்கத் தொடங்கியுள்ளது. உரிமைப் போராட்டம் இன்னும் உயிர்ப்போடு உள்ள செய்தியையும் அது எடுத்துச் சொல்லியுள்ளது.

தான் வைத்த பொறியில் தானே அகப்பட்டுக் கொள்வது போல சர்வதேச அழுத்தங்களிலிருந்து தப்பிக்கொள்ளவும் தன்னை பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டும் அமைத்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் மாட்டிக் கொண்டுள்ளது சிறிலங்கா அரசு.

ஐ.நா மனித உரிமைப்பேரவையில் சிறிலங்கா அரசுக்கு எதிராக அமெரிக்கா தலைமையில் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானம் குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் தமிழர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதனை மட்டும் நோக்கமாக கொண்டு கொண்டுவரப்படவில்லை என்பதையும் தங்களது அரசியல் புவியியல் பொருளாதார பாதுகாப்பு என நீளும் தங்களது அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்ளவும் தங்கள் பிடிக்குள் இருந்து விலகிச்செல்லும் சிறிலங்கா அரசை வழிக்கு கொண்டுவரும் நோக்கங்களை முன்னிறுத்தியே கொண்டுவரப்பட்டது. என்பதையும் தமிழர்கள் நன்கறிவர். ஆயினும் இந்தத் தீர்மானம் இருட்டிலேயே கிடந்தவர்களுக்குச் சிறுவெளிச்சம் கிடைத்ததைப் போலவும் பூட்டியே இருந்த கதவுகள் சற்றுத் திறந்து கொண்டதைப்போலவும் சிறு நம்பிக்கை தமிழர்களுக்குள் துளிர்விட ஆரம்பித்திருக்கிறது.

தமிழர்களுக்கு தன் இரத்தம் தோய்ந்த யுத்த முகத்தையும் சர்வதேசத்துக்கு அமைதியை சமாதானத்தை விரும்புகின்ற புத்தமுகத்தையும் காட்டுகின்ற சிங்கள அரசு வழமைபோல் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்றுவோம் என மனிதவுரிமைகள் அவையில் வாக்குறுதிகளை அள்ளி வீசியெறிந்துவிட்டு நாடு திரும்பிய கையோடு தன் வரலாற்றுக் குணத்தைக் காட்டி நிற்கின்றது.

நீதியை, உரிமையை சிங்களம் எப்போதுமே தமிழர்க்கு வழங்கப்போவதில்லை என்ற உண்மையை வரலாற்றில் பட்டுணர்ந்த பாடங்களினூடாக மிகச்சரியாகவே தமிழர்கள் புரிந்துவைத்துள்ளனர். இராணுவ ஆக்கிரமிப்பும், நில அபகரிப்பும், இனவழிப்பும் மூலை முடுக்கெல்லாம் புத்தரின் சிலைநடுகையெனவும் இலங்கைத்தீவு முழுவதுமே சிங்களர்க்கு மட்டுமே சொந்தமான சிங்கள பௌத்த நாடாகமாற்றும் நடவடிக்கையே தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. போராட்டத்தின் தேவை என்பது முன் எப்போதையும் விட இப்போதுதான் அதிக தீவிரம் பெற்றுள்ளது. எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாய் நிற்கின்ற மக்கள் மரணம் உறுதி என்கின்றபோது உயிர்பறித்திட துரத்தும் கொடுங்கரங்களுக்கு எதிராகப் போராடிப் பார்த்து விடுவோம் என்கின்ற முடிவுக்கே இறுதியில் வருவார்கள்.

இதனைச் சர்வதேசமும் புரிந்து வைத்திருக்கின்றது. அதனாலேயே நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்திக் குறைந்தபட்ச அதிகாரப் பகிர்வையேனும் தமிழர்க்கு வழங்காவிட்டால் 'மீண்டும் போர் வெடிக்கும்', 'ஈழக்கோட்பாட்டாளர்களின் கரங்கள் வலுப்பெறும்' என்பது போன்ற எச்சரிக்கைகளை சிறிலங்கா அரசினை நோக்கி சர்வதேசம் தொடர்ந்து விடுத்துவருகின்றது.

சிறிலங்கா அரசினைப் பொறுத்தவரையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாமலேயே நடைமுறைப்படுத்தியது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தித் தப்பிக்கொள்ளவே முயற்சிக்கின்றது. இதனை ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்த வேண்டிய பொறுப்பும் அதேநேரத்தில் சர்வதேச விசாரணை ஒன்றின் அவசியத்தைக் கோருதலும் வேண்டும். தமிழரின் உரிமைப் போராட்டத்தை அழிப்பதற்கு சிங்களத்துக்கு உதவிய சர்வதேசம் வரலாற்றில் மன்னிக்கமுடியாத மாபெரும் தவறினை இழைத்தது. அதனை சரிசெய்ய வேண்டிய பொறுப்பு அதற்கு உண்டு. அதனை உணர்த்த வேண்டிய கடமை நமக்கு உண்டு.

'அறியாது கொலையுண்ட
அனைவரும் உண்மை
நெறிகொள்ளும் பலத்தாலே
உயிர் பெற்று நிற்பார்!'

மக்சீம் கார்க்கியின் 'தாய்' நாவலில் இடம்பெற்ற கவிவரிகள்.



# எதியோப்பியா கரியாகும் காடுகள் !

ஜி.எஸ்.எஸ்.

எலும்பும் தோலுமான கண் பிதுங்கிய கறுத்த குழந்தைகளின் பரிதாபப் படங்களைப் பார்த்ததுமே 'ஓ, ஏத்தியோப்பியா' என்று சொல்லி விடுகின்ற அவலம். அந்த அளவுக்குப் பஞ்சத்தில் அடிபட்டுக் கிடக்கிறது. உலகத்திலேயே மிக ஏழ்மையான நாடுகள் ஏத்தியோப்பியாவும் மொஸாம்பிக்காவும்தான்.

உண்மையில் வேறெந்த ஆப்பிரிக்க நாட்டுக்கும் இல்லாத பெருமைகள் ஏத்தியோப்பியாவுக்கு உண்டு. அதையெல்லாம் அமுக்கிவிட்டு விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது பசிக்கொடுமை.

இந்த வருடம் என் ஆடுமாடுகளை விற்று உணவுப் பொருள்களை வாங்கினேன். இல்லையென்றால் நாங்கள் இறந்து விடுவோம் என்ற நிலை. இந்த உணவுப் பொருளும் தீர்ந்து விட்டால் நெருங்கிவிடும் சாவுக்காகக் காத்துக் கிடப்பதைவிட வேறு வழியில்லை என்று கதறும் எத்தியோப்பிய மக்கள் பல லட்சம். மற்ற எந்த ஆப்பிரிக்க நாட்டுக்கும் இல்லாத சில பெருமைகள் எத்தியோப்பியாவுக்கு உண்டு. மிகமிகப் பழமையான சரித்திரம் கொண்டது இந்த நாடு. பைபிளில் இடம் பெற்றுள்ள ஷீபா என்ற புத்திசாலி அரசிக்கும் அறிவாளி மன்னர் சாலமனுக்கும் பிறந்தவர் தான் எத்தியோப்பியாவின் முதல் சக்கரவர்த்தியான முதலாம் மனேலிக் என்பது சரித்திர நம்பிக்கை. புராதானமான சரித்திரம் கொண்ட எத்தியோப்பியா, அந்நிய நாட்டவர் எவருக்கும் அடிமைப்பட்டுக்கிடந்தது இல்லை. (இடையே இத்தாலியின் கட்டுப்பாட்டில் இருந்த ஐந்து வருடங்களை மட்டும் விட்டுவிட்டால்) ஆபிரிக்கா சுதந்திரத்தின் அடையாள சின்னமாகவே எத்தியோப்பியா மதிக்கப்படுகிறது. ஆப்பிரிக்க ஒற்றுமை அமைப்பின் தலைமையகம் கூட எத்தியயோப்பியாவின் தலைநகரான அடிஸ் அபாபாவில்தான் இருக்கிறது.

வேதனை எங்கே, எப்போது வேர்விட ஆரம்பித்தது?

1962ல் ஹெயிலி செலாஸி என்ற எத்தியோப்பியச் சக்ரவர்த்தி பக்கத்துப் பகுதியான என்ட்ரியாவை தன் நாட்டோடு இணைத்துக் கொண்டார். அப்போது தொடங்கிய என்ட்ரிய மக்களின் பிரிவினைக்கோசம் வலுவோடு ஒலிக்கத் தொடங்கி இருக்கிறது.

மனித உரிமைக் குழு அளித்த தீர்ப்பில் நியூரம்பர்க்கொடூரங்களுக்குப் பிறகு மிக அதிக அளவில் மனித உரிமைகள் மீறப்பட்டது மெங்கிஸ்டுவின் ஆட்சிக் காலத்தில்தான் என்று கூறப்படுகிறது. தனது அரசை கம்யூனிஸ அரசு என்று அறிவித்துக்கொண்டால்தான் சோவியத் யூனியனின் ஆதரவும் எத்தியோப்பிய அதிபர் மெங்கிஸ்டுவுக்கு ஆரம்ப காலத்தில் கிடைத்து வந்தது. தொடக்கத்தில் எந்த வெளிச்சத்துக்கும் தலைவணங்க மாட்டோம் என்று அறிவித்த மெங்கிஸ்டு நாளடைவில் நாட்டின் நெருக்கடிகள் அதிகமாகிவிட எத்தியோப்பியாவின் பொருளாதாரக் கொள்கைகளை மாற்றி அமைக்க ஒப்புக்கொண்டான். அப்போதுதானே உலக வங்கியின் நிதி உதவி கிடைக்கும்! இதே சமயம் என்ட்ரியா தனிநாடக வேண்டும் என்ற அந்தப் பகுதியின் புரட்சியாளர்கள் தீவிரமாகக் கருத உள்நாட்டுக் கலவரங்கள் தொடங்கி,போர் என்ற கட்டத்தை எட்டியது.

ஆப்பிரிக்காவின் முதல் கிறிஸ்தவ நாடு எத்தியோப்பியாதான். சட்டப்படி குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பப்படவேண்டும் என்பது எத்தியோப்பியாவில் கட்டாயமில்லை. படிப்பறிவு பெற்றவர்கள் மிகக் குறைவு. கடும் பஞ்சம் என்றாலே எத்தியோப்பியாவும் மற்றொரு ஆப்பிரிக்க நாடான சோமாலியாவும்தான் நம் நினைவுக்கு வரும் இந்த இரு நாடுகளும் சுமார் கால் நூற்றாண்டுக்கு முன் போரில் இறங்கிய துண்டு. எத்தியோப்பியாவின் எல்லைப் பகுதியில் சோமாலிய இனத்தைச் சேர்ந்தவர்கள் பலர் உண்டு. தங்களுக்குத் தனி குடியரசு உரிமை வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கையை எத்தியோப்பியா எற்கவில்லை. தங்கள் இன மக்களுக்கு ஆதரவாக சோமாலியா, எத்தியோப்பியா மீது படையெடுத்தது. நல்ல வேளையாக ரஷ்யா மற்றும் கியூபா ஆகிய நாடுகள் எத்தியோப்பியாவுக்கு ஆதரவாகக் களத்தில் இறங்கின. சோமாலிய படைகள் பின்வாங்கின.

என்னதான் ஆட்சியாளர்களை இராணுவமும், புரட்சிவீரர்களும் தூக்கியெறிந்தாலும் அவர்களைக் கொன்றதில்லை.

எத்தியோப்பியாவின் கடைசிச் சக்ரவர்த்தியான ஹெய்லிசெலஸி இங்கிலாந்தில் தஞ்சமடைந்தார். பின்னாளில் கர்னல் மெங்கிஸ்டு ஜிம்பாவேயில் அடைக்கலம் தேடிக்கொண்டார்.

அராபிகா என்ற காப்பிக்கொட்டை வகையை முதலில் பயிரிட்டது எத்தியோபியாதான். சொல்லப்போனால் கஃபா என்ற எத்தியோப்பியாவின் தென்மேற்குப் பகுதியின் பெயரிலிருந்துதான் காஃபி என்ற வார்த்தை உருவானது என்கிறார்கள். (அந்தப் பகுதியில்தான் மிகப் பெருமளவில் காபி பயிரிடப்படுகிறது.)

வட்டமான வீடுகள், அவற்றில் கூம்பு வடிவக் கூரைகள் மாட்டு வண்டிகள் இவையெல்லாம் ரொம்ப சகஜம் என்றாலும் தலைநகரான அடிஸ் அபாபாவில் மட்டும் மிக உயரமான கட்டடங்களைக் காணலாம்.

முன்பு அபிஸீனியா என்று அழைக்கப்பட்டது இந்த நாடு. எத்தியோப்பியாவின் தேசிய கீதத்தின் பொருள் இது. அன்புள்ள எத்தியோப்பியா அன்னையே, நீமுன்னேறு, மலர்ச்சிகொள், செழிப்பு கொள், ஐயோ பாவம்!

1990ல் இந்தப்போர் தற்காலிகமாகவாவது ஒரு முடிவுக்கு வர இரு வல்லரசுகளும் உதவின. தனது இராணுவ உதவியை நிறுத்திக்கொண்டது சோவியத் யூனியன். எத்தியோப்பியாவின் இரு தரப்பினரும் பேச்சுவார்தைகள் நடத்த வகை செய்தது அமெரிக்கா.

என்றாலும் புரட்சியாளர்கள் மெங்கிஸ்டுவை ஆட்சியிலிருந்து தூக்கிவிட, அவர் ஒசைப்படாமல் ஜிம்பாவேக்குப் பறந்துவிட்டார். ஆனால், தான் ஆட்சி செய்த காலங்களில் கர்னல் மெங்கிஸ்டு மேற்கொண்ட ஒரு புதுவித கொடுமைதான் எத்தியோப்பியா இன்று மரண விளிம்புக்குப்போக மறைமுகக் காரணமாகி விட்டது.

என்ட்ரியப் புரட்சியாளர்களை ஒடுக்குவதற்குதான் கையாண்ட கொலை முறைகள் தவிர, இன்னொன்றையும் செய்தான் மெங்கிஸ். அந்தப் பகுதிகளில் இருந்து விவசாயிகள் அத்தனை பேரையும் ஒட்டுமொத்தமாக வெளியேற்றி விட்டான். விளைநிலங்கள் தரிசாகக் கிடக்க அந்தப் பகுதியில் இருந்த புரட்சியாளர்கள் தவிர, அப்பாவிப் பொதுமக்கள் பசியில் சுருண்டு விழுந்து சாகத் தொடங்கினர். சொந்தப் பகுதிகளை விட்டுக் கடத்தப்பட்ட சுமார் ஐந்து லட்சம் விவசாயிகள் மீண்டும் தங்கள் நிலங்களுக்குத் திரும்பவே முடியவில்லை. அந்த நேரம் பார்த்து இயற்கையும் தன் கொடூரமான பக்கத்தைக் காட்டியதுதான் பேரழிவுக்குத் காரணமாகி விட்டது.

புரட்சியாளர்களை அடக்குவதற்கு விவசாயிகளைக் கடத்தி விளைச்சலை முடக்கிய கர்னல் மெங்கிஸ்டு, இன்னொரு தடுப்பு நடவடிக்கையும் மேற்கொண்டான். புரட்சியாளர்களின் செல்வாக்கு ஓங்கியிருந்த பகுதிகளுக்கு வெளியிலிருந்தும் உணவுப் பொருட்கள் போகாமல் தடுத்தான். ஆயிரம் ஆயிரமாக மக்கள் சாவது தொடச்சியாக நடந்தது.

போதாக்குறைக்கு எத்தியோப்பியாவை வறட்சியும் தாக்க இருபது லட்சம் பேர் நாடு முழுக்க இறந்த கொடுமை நிகழ்ந்தது. அன்று விழுந்தது தான் பஞ்சமும் வறட்சியும் இந்த நாட்டை புரட்டிப் புரட்டி அடிக்க ஆரம்பித்து விட்டன!

இப்போது எத்தியோப்பியாவை ஆண்டு வருவது T.G.E (transitional government of ethiopia) என்ற அமைப்பு ஆனால், இதிலும் சில சிக்கல்கள், எத்தியோப்பியாவில் மெஜாரிட்டியாக இருப்பது ஒரோமோ என்ற இனத்தினர். ஆனால் மற்றொரு இனமாக டைக்ரியன் பிரிவைச் சேர்ந்தவர்கள்தான் மேற்படி அமைப்பில் பெரும்பங்கு வகிக்கிறார்கள். இதனால் ஒரோமோ பிரிவினருக்கு எரிச்சல்.

கர்னல் மெங்கிஸ்டுவின் ஆட்சியை அகற்ற என்ட்ரியாவின் புரட்சியாளர்கள் உதவி செய்த காரணமே ஆட்சி நீக்கப்பட்ட பிறகு தங்கள், நாட்டுக்குச் சுதந்திரம் வழங்கப்படும் என்பதற்காகத்தான். ஆனால், இது வரை அது நடக்காததால் அவர்களும் கடும் கோபத்தால் இருக்கிறார்கள்.

நாற்பது சதவிகித மக்கள் எத்தியோப்பியன் ஆர்த்டாக்ஸ் சர்ச், என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள். கிறீஸ்தவ மதம்தான் என்றாலும், வேறு எந்த நாட்டிலும் இல்லாத தனிஅமைப்பு இது. மற்றவர்களில் நாற்பது சதவிகிதம் பேர் முஸ்ஸிம்கள். ஆனால், மதத்தின் காரணமாக கடந்த பல வருடங்களில் எத்தியோப்பியாவில் கலவரங்கள் நடந்ததில்லை என்பதுதான் ஆறுதலான ஒரே விடயம். எத்தியோப்பியாவில் மக்கள் தொகை ஆண்டுக்கு ஒன்பது சதவிகிதம் என்ற கணக்கில் ஏறிக்கொண்டிருந்தாலும் அங்கு வசிக்கும் மனிதனின் சராசரி ஆயுள் முப்பத்தெட்டு வருடங்கள்தான். அந்த அளவுக்குப் பஞ்சமும் நோய்களும் பரவலாகிக் கொண்டிக்கின்றன.

1973ல் ஏற்பட்ட பஞ்சத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சம்! தங்கள் நாட்டின் இமேஜ் குறைந்து விடக்கூடாது என்று எண்ணிய சக்கரவர்த்தி ஹெய்லி செலாஸி, பஞ்சமா! அப்படி எதுவும் இல்லையே. இங்கே சர்வம் சுபிட்சம்! என்று பச்சையாகப் புளுகி, வெளிநாட்டு உதவியை ஏற்க மறத்துவிட்டார். பஞ்சத்தின் விளைவு மேலும் பயங்கரமாக மாற இது ஒரு முக்கிய காரணம்.

பன்னிரெண்டு வருடங்களுக்கு முன் மேலும் கடுமையான பஞ்சம். இந்த முறை இறந்தவர்களின் எண்ணிக்கை பத்து லட்சமாக உயர்ந்தது.

எல்லாக் கொடுமைகளும் செய்த சக்ரவர்த்தி ஹெய்லி செலாஸி இங்கிலாந்துக்கு ஓடிப் போனார். பின்னாளில் கர்னல் மெங்கிஸ்டு ஜிம்பாவேயில் தஞ்சம் புகுந்தார். இப்போது, அமெரிக்க உதவியுடன் எத்தியோப்பியாவில் விவசாயத் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதில் கலந்துகொண்டு பணியாற்றுபவர்களுக்கு உணவுப் பொருள்தான் ஊதியமாக வழங்கப்படுகிறது.

இன்றைய நிலையில் எத்தியோப்பியாவுக்கு அதிக உணவுப் பொருள்களும் மருத்துவ உதவியும் தேவைப்படுகின்றன. ஆனால் சோமாலியா, ருவாண்டா ஆகிய ஆப்பிரிக்க நாடுகளும் கடும் வறட்சி மற்றும் நோய்களைச் சந்தித்து

வருவதால், எத்தியோப்பியாவுக்கு அளிக்கப்படும் நன்கொடையின் அளவு குறைந்துவிட்டது. மலேரியா போன்ற வியாதிகள் மிக பரவலாகிக் கொண்டிருக்கின்றன. நாட்டின் விவசாயநிலம் அனைத்துமே அரசுக்குச் சொந்தமென்பதால் விவசாயிகளால் நிலத்தை அடகு வைத்துப் பணம் புரட்ட முடியாத நிலை.

பல இடங்களில் உணவாகக் கிடைக்கும் கிழங்குகளை அவித்து உண்பதற்கு எரிபொருள் ஏதும் இல்லாததால் மக்கள் மரங்களை வெட்டி எரித்துக் கொண்டே இருக்க உலகத்திலேயே இதுவரை நிகழாத அளவுக்குக் காடுகள் சூறையாடப்பட்ட கொடுமையும் நடந்தது. இதன் விளைவாக பெய்து கொண்டிருந்த கொஞ்ச நஞ்ச மழையும் நின்றுபோக, ஒரு பயங்கர நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது எத்தியோப்பியா!

# உங்கள் கனவுகள் நிறைவேற...

## தன்னம்பிக்கை சொற்பொழிவாளர் ராபர்ட் ஹெச் சூல்லர்

'என்னால் செய்ய முடியும்' என்பதைவிட முக்கியமானவை, 'என்னால் நன்றாகவே செய்து முடிக்க முடியும்' என்ற இந்த ஐந்து வார்த்தைகள்தாம் எப்போதும் உங்கள் மனதிலும் செயலிலும் ஒலித்துக்கொண்டும், பிரகாசித்துக் கொண்டும் இருக்க வேண்டும். அப்போதுதான் உங்களின் எல்லாக் கனவுகளும் நிறைவேறும். பிரச்சினைகளிலிருந்து தப்பிக்க மது, போதை மாத்திரை, தற்கொலை முதலியவற்றை நாடாதீர்கள். அது பிரச்சினைகயைத் தடுக்கப் போதில்லை அது மேலும் பிரச்சினைகளைப் புதிதாக உருவாக்கும், மாறாக, பிரச்சினைகளைச் சந்தித்து நிர்வகிக்க சமாளிக்க கற்றுக் கொள்ளுங்கள், எந்த மகாப் பிரச்சினையிலும் இம்மியளவாவது ஒரு வழி புலப்படும். அந்த வழியை விடாதீர்கள். அந்தச் சிறு வழியே பிரச்சினைகளை வெல்லக்கூடிய பெரிய தீர்வாக அமைய வாய்ப்பு இருக்கிறது.

என்னைப் பொறுத்தவரை ஓய்வு நேரம் என்றால், அது பயன்மிக்க இன்னொரு செயலைச் செய்யக் கிடைத்த வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வதுதான் என்பேன். நம்பிக்கை என்றால் சக்தி என்று அர்த்தம் நம்பிக்கையால் பலவீனமான சூழ்நிலைகள் பலமான வாய்ப்பாக மாற்றப்படும். நம்பிக்கை என்ற மூலப்பொருளுக்குள்தான் சக்தி என்ற ஆயுதம் இருக்கிறது. சிறப்பான வழியையே தேர்வு செய்யுங்கள் எதிலும் முதல்தரச் சிந்தனை செயல்தான் தேவை. எப்படி இவற்றை பெறுவது என்பது பற்றிக் கவலைப்படாதீர்கள். ஊக்கமான முயற்சியை வரவழைத்துக் கொள்ளுங்கள், நீங்கள் விருப்பியதைப் பெற்றுத்தரும். உங்களது முயற்சி யின்போது உங்களுக்குச் சில கதவுகள் அடைக்கப்படலாம். நினைவில் கொள்ளுங்கள். வாழ்க்கையில் ஒரு கதவு அடைக்கப்படும் போது இன்னொரு கதவு நிச்சயமாகத் திறக்கத் தொடங்கியிருக்கும். உங்களை வெளிப்படுத்திக் கொள்ளும்போதே நேர்மறையான வார்த்தைகளாகப் பயன்படுத்திப் பழங்குகள் அய்யோ.... அச்சச்சோ!... அழிஞ்சுபோச்சு! எல்லாமே காலி! முடியாது! என்று தாழ்வாகப் பேசுவதைத் தவிர்த்து விடுங்கள். ரிஸ்க் எடுக்கத் தயங்காதீர்கள். ரிஸ்க் எடுக்க துணியும் வரை முன்னேற்றம் என்பது இல்லை.

# நெஞ்சைப்பிழியும் போராளிகளின் நினைவுகள்

**புங்கையூர் நிலவன்**

நெஞ்சிலே விடுதலைத் தீ சுமந்து வீரகாவியமான எம் தேசத்தின் செல்வங்களுக்கும், கொடிய போரிலே தம் உயிரை இழந்த எம் தமிழ் உறவுகளுக்கும் முதலில் எனது அஞ்சலிகள்! எம் தேசத்திலே தாயகக் கனவுகளை நெஞ்சிலே சுமந்து வீரகாவியமான எம் தியாகிகளை நாம் என்றுமே மறக்க முடியாது தன் உறவுகளின் விடிவுக்காகத் தாய் மண்ணின் விடுதலைக்காகத் தங்களது உயிர்களைத் துச்சமென நினைத்துப் பகைவருடன் களமாடி மடிந்த எம் மாசற்ற மறவர்களுடன் என்சிறு பிராயத்தில் இருந்து புலம் பெயரும் வரைக்கும் நன்கு பழகியவன், உறவாடியவன் என்ற ரீதியில், அவர்களின் நினைவுகள் தாங்கிய ஒரு தொடர் ஒன்றுடன் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடையும் அதே வேளை, என் நெஞ்சு வெடிக்கும் போல் இருக்கும் என் நெஞ்சுச் சுமையை புலம் பெயர்ந்து வாழும் என் உறவுகளுடன் பகிர்ந்து சற்று ஆறுதல் அடையலாம் என நினைக்கின்றேன்

காரணம் சிலர் தமது சுய இலாபங்களுக்காக, எமது விடுதலைப் போராட்டத்தையும், வீரகாவியமானவர்களையும், கொச்சைப்படுத்தி வசைபாடுவதை பத்திரிகைகள் மூலமும், சிலர் கதைக்கும்போதும் கேட்டு பொறுக்க முடியாது கவலைப்பட்டிருக்கிறேன், ஏனென்றால் ஒரு மனிதனால் செய்யக்கூடிய மிகப்பெரிய தியாகம் உயிர்த்தியாகமே, நாம் அனைவரும் அதனை ஒப்புக்கொள்ளவேண்டும். எமது உயிரை பாதுகாக்கவே இங்கு நாடு விட்டு நாடு நாடாக தமிழராகிய நாங்கள் வந்திருக்கிறோம். ஆனால் அவர்கள் தங்களது உயிரையே எமக்கு வேலியாக்கி எம்மைக் காத்தவர்கள். அவர்கள் இறுதியாக எம்மிடம் விடைபெற்றுத் துயிலும் இல்லம் போகும் போது எதைத்தான் தங்களுடன் கொண்டு போனார்கள். ஒன்றுமே இல்லை. இப்படிப் போராளிகள் மீது நம்பிக்கை வைக்க எனது சிறு பிராயத்திலே குமுதினிப் படகில் படுகொலை செய்யப்பட்ட எம் உறவுகளை நேரே பார்த்ததுதான் முக்கிய காரணம். சில பேருடன் இல்லை, பல போராளிகளுடன் பழகியவன் என்ற வகையில், நான் கண்ட எம் போராளிகள் எப்படிப்பட்டவர்கள் என்ற உண்மையை உங்களுக்குச் சொல்லவேண்டிய தார்மீகக்கடமை எனக்குண்டு. இல்லையேல் நான் எம் தேசத்திற்கும், மாவீரர்களுக்கும் செய்யும் பாரிய தவறு என்று கருதுகிறேன்.

இவ்வாறு பகிர்ந்து கொள்வதன் மூலம் என் தேசத்தின் தியாகிகளுக்கு ஏற்பட்டு இருக்கும் சில தப்பான அபிப்பிராயத்துக்கு எனது இந்த தொடர் கொஞ்சமேனும் நியாயத் தன்மையை எடுத்துரைக்கும் எனக் கருதுகிறேன். நாம் நிம்மதியாக, சுபீட்சமாக வாழவேண்டும் என்று சாவினைத் தோள்மீது சுமந்து எம் சகோதர, சகோதரிகள் வித்தாக விதைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லம் எல்லாம் இப்போது எங்கே? சிந்தித்து பார்த்தால் நெஞ்சே வெடித்துவிடும். சிந்தித்து பாருங்கள். ஒரு மனிதனுக்கு உயிருடன் இருக்கும் போது இல்லாத மரியாதை இறப்பின் பின் இருக்கும். ஆனால் எம் மாவீரச் செல்வங்களுக்கு எங்கே? அன்று நாம் துயிலும் இல்லங்களினுள்ளே நுழையும் போது சத்தம் செய்யாதீர்கள் என்றும், மாவீரர்கள் துயிலுகிறார்கள் என்றும் எழுதப்பட்டிருக்கும். ஆனால் இன்று அன்னியன் மனிதாபிமானமே இல்லாமல் அந்தப் புனிதமான இடத்தை இடித்து அழித்து

தரைமட்டமாக்கி அதிலே விளையாட்டு மைதானமும், இராணுவ முகாமும் அமைத்து உள்ள அதே வேளை பல இடங்களில் கூலிக்கு மாரடித்த சிங்களப்படைகளுக்கு நினைவுச்சின்னம் அமைத்து இருக்கிறார்கள். இது எப்படி? சிந்தித்து பாருங்கள். சில மாவீரர் துயிலும் இல்லங்களைத் தோண்டி எடுத்து வந்து வீதிகள் புனரமைப்புக்குப் பயன்படுத்தி இருக்கிறார்கள். கொடுமையிலும் கொடுமை. அந்த வீதிகளிலே

ஒரு பொதுமகன் என்பதை விட, ஒரு பாடசாலை மாணவனாக இருந்து அவர்களுடன் பழகியவன், என்ற ரீதியில் பதுங்குகுழி அமைத்தல் முதல் விழுப்புண் அடைந்த போராளிகளைப் பராமரித்தல், உலர் உணவு சேமித்தல், மாணவர் அமைப்பு, கிராமியப்படை, மாணவர்படை, மாவீரர்களின் இறுதி வணக்க நிகழ்வு வரையாக நான் கண்ட அனுபவங்களை இங்கு தருகிறேன்.



எமது மாவீரர்களின் எலும்பு, முடி, எச்சங்களை எம்முறவுகளே கண்டு கண்ணீர் மல்கிய நிகழ்வுகளும் நடந்தேறி இருக்கிறது. பின் பலரின் முயிற்சியிலே அதை தடுத்து நிறுத்தியதாக அறிந்தோம். ஐயோ நாம் நாடு திரும்பி வந்து எம்முடன் ஒடியாடி விளையாடிய எம் உறவுகளை, எம்மை அம்மா என்றும், அப்பா என்றும், அண்ணா என்றும், அக்கா என்றும் அழைத்த எம் உறவுகளின் கல்லறையைக் கூடப் பார்க்க முடியாதா? ஆம் எத்தனை துயிலும் இல்லங்கள். இன்று ஒன்று கூட இல்லையே. மானமுள்ள தமிழன் அல்லவா! இரத்தம் துடிக்கவில்லையா?

என் அன்பானவர்களே! நான் இவர்களைப் பற்றி எழுதுகிறேன். ஆனால் நான் ஒரு போராளி இல்லை. நான் எனது உயிரை காத்தவர்கள் என்ற நன்றி உணர்வுடனே எழுதுகிறேன். நான்

உண்மையிலேயே நான் ஒன்று கூறுகிறேன் என் உறவுகளே! அந்தப் போராளிகளை மாவீரர்களை நாம் போற்றிப்புகழாது விட்டாலும் அவர்களைப்பற்றி தப்பாகப்பேசாமல் விடுவதே அவர்களுக்கு நாம் செய்யும் அஞ்சலியாக அமையும். எனது இந்தத் தொடரானது ஒன்று இரண்டல்ல பல தொடர்களாக உங்களுடன் பகிர்ந்து கொள்வேன்.

நான் தாயகத்தில் இருக்கும் போது கோயிலுக்கு போனேனோ இல்லையோ? ஆனால் துயிலும் இல்லங்களுக்கு போவேன். இன்று எமது நாட்டில் எத்தனை சீர்கேடுகள்? எத்தனை பாலியல் வல்லுறவுகள்? எம்மினத்தை அடிமையாக்கிச் சிங்களவனே ஆதிக்கம் செலுத்துகிறான். அதற்கு எம்மினத்தைச் சேர்ந்தவர்களே துணை போகிறார்களென்று நினைக்கும் போது வேதனையாக இருக்கிறது. நாடு விட்டு நாடு

தாண்டி வந்து நாம் எமது தமிழன் கொடியை ஏந்தி நீதி கேட்கிறோம். ஆனால் எமது பிரதி நிதிகளே அங்கு சிங்கக்கொடி ஏந்தி கொண்டா டுகிறார்கள். வெட்கமாக இல்லையா? ஐந்து அறிவு கொண்ட காகத்தை பாருங்கள் எம் உறவுகளே! ஒரு காகத்தின் குஞ்சை பிடித்து கட்டி வைத்து பாருங்கள், அடித்து பாருங்கள், எத்தனை ஆயிரம் காகங்கள் கூடி எம்மை குட்டுகிறது. அந்தப் பறவைகள் நிறைந்தது எம் நாடு. அதை பார்த்தாவது கற்றுகொள்ள வேண்டும். அன்று அவர்களது கட்டுபாட்டில் வாழும் போது எந்த மனிதனும் எந்த இரவிலும் தனித்து எங்கும் செல்லலாம் ஆனால் இப் போது பகல் பொழுதிலேயே தனிவழி போகப் பயப்படும் காலமாகிவிட்டது. எது வரைக்கும் தமிழனுக்கு இந்த நிலை...?

என்னினிய உறவுகளே! எந்த மகானோ, அரசி யல்வாதிகளோ தப்புச் செய்யாதவர்கள் இல் லை, அது போன்று ஒரு சில தவறுகள் நிக ழ்ந்து இருக்கலாம். ஆனால் ஒட்டுமொத்த போ ராட்டத்தையும் கொச்சைப்படுத்த வேண்டாம். அடக்கப்பட்ட இனம் தொடர்ந்து அடங்கிய வரலாறு இல்லை. எமக்கு ஒரு விடிவு காலம் வரும். அந்த புனித தேசத்திலே மாவீரர்களுக்கு நடுகல் வைத்து வணங்குவோம். அப்போது இவர்களின் அற்பணிப்பு எம் இனத்துக்கென்ன உலகிற்கும் அம்பலமாகும். அந்த நாள் வரை க்கும் காத்திருப்போம்.

தொடரும்...



# என்னம்மா சாப்பாடு

## சவோரி ரைஸ்

தொகுப்பு - பாராணி

வேக வைத்த சாதம் - 2 பெரிய கப்
பெரிய முட்டை - 5
உருக்கிய நெய் - 5 மே.கரண்டி
மிளகு உப்பு - சுவைக் கேற்றவாறு
சிறிய வெங்காயம் அரிந்தது - 3 மே.கரண்டி
பச்சைமிளகாய் அரிந்தது - 1 மே.கரண்டி
லீக்ஸ் தண்டு சிறிதாக அரிந்தது - 2

### செய்முறை

ஒரு பாத்திரத்தில் நெய்யூற்றி நன்றாகச் சூடான தும், சிறிதாக அரியப்பட்ட லீக்சை அதனுள் இட்டு 5 நிமிடங்களுக்கு வேக விடவும். அரிந்த வெங்காயத்தையும், மிளகாயையும் அதனுள் இட்டு அவற்றையும் கருகா வண்ணம் நன்றாக வேகவைக்கவும். வேறொரு தட்டையான பாத் திரத்தில் முட்டையை உடைத்து ஊற்றி அத னுடன் உப்பு, மிளகுத்தூள் இட்டு நன்றாக முள்ளுக்கரண்டியால் நுரை வரும் வரை அடிக் கவும். அடித்த முட்டையை லீக்ஸ், வெங்காயம், மிளகாய் வேகும் பாத்திரத்தில் இட்டு நன்றாகக் கிளறி வேக வைக்கவும். ஒரு மரக் கரண்டியால் முட்டையைச் சுழற்றிச் சுழற்றிக் கிளறுவதால், முட்டை சிறு சிறு துண்டங்களாகும். இதனுள் வேக வைத்த சாதத்தைச் சிறிது சிறிதாக இட்டுக் கிளறி ஒரு சூடான தட்டைப் பாத்திரத் தில் இட்டுப் பின்னர் பரிமாறலாம்.

சாத வகைகளில் இது மிகவும் ருசியானது. ஆடு அல்லது கோழி இறைச்சி வகைகளுடன் இதனைப்பரிமாறினால் நெய்ச்சாதம், மஞ்சள் சாதம் கொடுக்கும் சுவையைத் தரும்.

# மனிதர்களாகும் மிருகங்களும் மிருகங்களாகும் மனிதர்களும்

வி.பாஸ்கரன்

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை வல்லரசுகள் கண்டுபிடித்து வைத்திருக்கும் சம காலத்தில் கண்டம் விட்டு கண்டம் பறந்து வாழும் அகதிகளாக நாம் தள்ளிவிடப்பட்டிருக் கின்றோம். ஆனால் இந்த வாழ்வில் சாதகங் களும் உண்டு, பாதகங்களும் உண்டு.

நாம் புலம் பெயர்ந்து வாழ்வதில் பல்வேறு ஐரோப்பிய மொழிகளை விளங்கிக்கொள்ளக் கூடியவர்களாவும், பேசக்கூடியவர்களாவும் பல்மொழி ஆற்றலை பெற்றிருப்பதால் அவர் களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ள முடி கின்றது.

இதே வெள்ளைக்காரர்களை நான் தாயகத்தில் 1975களில் முதன் முதலில் சமூகக்கல்வி என்னும் பாடப்புத்தகத்தில்தான் பார்த்தேன். அந்தப்புத்தகத்தில் இவர்கள் வெள்ளைக்காரர் கள், எஸ்கிமோவர்களை படம் போட்டு விளங் கப்படுத்தியிருப்பார்கள். நாங்கள் படிக்கும் கால ங்களில் இவர்களோடு சேர்ந்து வாழும் நிலை யொன்று வருமெனக் கற்பனையில் கூட நினை த்து பார்த்திருக்க முடியாது. 1980களில் யாழ்ப் பாண நல்லூர் தேர்த்திருவிழாவில் ஒரு சில வெள்ளைக்காரர்களைச் சந்தித்தபோது உடன டியாக எங்களுக்கு வாயில் வரக்கூடிய சொல் லான Good என்றோம். அவர்கள் பதிலுக்கு சிரித்து விட்டுசென்றார்கள்.

இலங்கையில் யுத்தம் மூண்டபொழுது வல்லரசு களின் ஆயுத விற்பனையாளர்கள் Bad ஆன விடயமொன்றை எங்களுக்கு செய்தார்கள். ஆயு தங்களை இலங்கை ஆரசாங்கத்திற்கு விற்பனை செய்தார்கள். அந்த ஆயுதங்களிலி ருந்து எங்களைக் காப்பற்றிக்கொள்ள நாம் கண்டம் விட்டு கண்டம் பறக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டோம். ஆனால் அரசியல் வாதிகள் இது வர்த்தகத்தில் சகஜம் என அரசியல் நாகரீகத்தோடு சொல்வார்கள். 1985 களிலும் அதற்கு முன்னும் எனது தாயார் சொல்லும் ஒரு வசனம் 'உலை வைக்கப்போகி றேன்' என்பதாகும். உலைவைப்பதென்றால் முதலில் அடுப்பை மூட்டவேண்டும். நானும் இந்த பத்தியைப் பொறுத்த வரையில் அடுப்பை த்தான் மூட்டியிருக்கின்றேன். இன்னும் உலை வைக்கவில்லை.

இது பற்றியதொரு சிந்தனையை கிளறிவிட்டது, அண்மையில் வில்லியே லுபெல் என்ற இடத் தில் நடந்த ஒரு நிகழ்வாகும். மாநகர சபை கோடைகாலத்தில் சுற்றுச்சூழலை சிரமதான அடிப்படையில் சுத்தம் செய்யும் நிகழ்வொன் றை ஒழுங்கு பண்ணியிருந்தது. இதில் பிராங் கோ-தமிழ் சங்கமும் இணைந்து கொண்டது.



தமிழ்ச்சோலை குழந்தைகளும் மனவிருப்போடு இணைந்து கொண்டார்கள். மற்றும் பல சங்கங் களும் இணைந்து கொண்டு மகிழ்ச்சியோடு ஈடுபட்டார்கள். ஒரே இடம், ஒரே நோக்கம், ஒரே கொள்கை இவற்றோடு ஒன்றிணையும் போது எந்த இனத்தவர்களாக, எந்த மதத்தவர்களாக, இருந்தாலும் எங்களுக்கிடையே ஒரு நட்புணர்வு ஏற்படுவதுண்டு. அந்தப் பிரெஞ்சுக்காரும் என் னைப்பார்த்து சிரித்தார் நானும் பதிலுக்க சிரித்தேன். இருவரது கால்களும், இந்த ஏவுகணைகள், ஆயுத விற்பனைகளுக்கு அப்பால் ஒரு வரை நோக்கி ஒருவருக்குகிட்ட நகர்ந்தது நாம் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்ததும் கிட்ட நகர்ந்ததற்கும் எங்களுக்கிடை யே உள்ள மனித உணர்வுதான் காரணம்.

1980 களில் உடனடியாகவரும் வார்த்தை Good ஆக இருந்தது. ஆனால் 2012 களில் அவருடைய உணர்வை புரிந்து கொள்ளக் கூடியளவிற்கு எனக்குப் பிரெஞ்சு மொழியில் பேசக்கூடியதாக இருந்தது. கொஞ்சம் ஆழமா கப் பார்த்தால் இந்த ஆயுத விற்பனைக்கும் மொழி கற்றலுக்கும் ஒரு சம்மந்தம் உண்டு. நான் பேசிய பிரெஞ்சு மனிதர் ஒரு சாதாரண மானவர் அவருக்கும் ஆயுத விற்பனைக்கும் எந்த விதமான சம்பந்தமுமில்லை. அவரின் முகபாவத்திலிருந்தும் வாயிருந்து வெளிவந்த வார்த்தைகளிருந்தும் அவரின் பண்பாடும், மனிதநேயமும் வெளிப்பட்டது. உங்களுடைய நாடு தொலைவில் இருக்கிறதே என்றார்? இது ஆசியக்கண்டத்திற்கும் ஐரோப்பா கண்டத்தி ற்குமான இடையிலான தொலை தூரத்தை குறிக்கவில்லையென்பதை புரிந்து கொண்டேன் அவர் வெளிப்படுத்திய வார்த்தைகளையும் முக பாவத்தையும் பொருத்தி பார்த்துத்தான் அந்த உட்கருத்தை, உணர்வை என்னால் புரிந்து கொள்ளமுடிந்தது. Bad ஆன அரசியல்வாதி களினால்தான் இந்த நிலமை என பதில ளித்தேன். அவர் பின்பு வேலையில் மூழ்கி விட்டார். நான் அந்த மண்ணிலேயே பிறந்து வளர்ந்தவன். ஆதலால் அந்த நினைவுகளி லிருந்து மீளமுடியவில்லை.

சிறீலங்கா அரசாங்கத்தினுடைய மிருகத்தன மான மனித உரிமை மீறல்களையும் மனிதப் படுகொலைகளையும், சித்திரவதைகளையும் பல ஊடகங்களும், இணையத்தளங்களும், குறிப்பாக ஆங்கிலத்தொலைக்காட்சியும் வெளி க்காட்டியிருந்தன. பிரெஞ்சுக்காரரும் அக்கொடி ய, கண்கொண்டு பார்க்கமுடியாத காட்சிகளைப் பார்த்திருக்கலாம். பிரெஞ்சு நாடு மனித உரிமை களை முடிந்தளவிற்கு மதிக்கும் நாடு. அவர் இந்த நாட்டின் குடிமகன் அதனால்தான் உங்களது நாடு தொலைவில் இருக்கிறதெ ன்பதை என்னை காயப்படுத்தாமல் கூறியிருக் கிறார் போல் இருக்கிறது. இந்த பிரெஞ்சு மனிதர் மனத்தையே காயப்படுத்தக் கூடா தென்ற மனிதப் பண்பாட்டை கொண்டிருக் கின்றார். ஆனால் இலங்கை அரசாங்கமும், இராணுவமும் சரணடைந்த போராளிகளைக் கூரிய ஆயுதங்களால் கீறியும் சித்திரவதை செய்து சுட்டுச் கொன்று எரித்திருக்கின்றார்கள். எப்படி எங்களால் இவர்களை மனிதர்களாக ஏற்றுக் கொள்ளமுடியும்? மிருகக்குணங்கள் உள்ளவர்களோடு எப்படி இணைந்து வாழமுடி யும்? இத்தகைய கேள்விக்குறிகள்தான் எம்மன ங்கள் முழுக்க நிறைந்து போய் கிடக்கிறது.

யப்பானில் நில அதிர்வு நடைபெற்ற போது காயம்பட்ட ஒரு நாயை இன்னொரு நாய் கத்தி குரைத்து மனிதர்களின் உதவியோடு காப்பாற் றியதை பார்த்தோம். ஒரு விலங்கு இன்னொரு விலங்கிற்கு பால்கொடுத்து அன்பைப் பரிமாறி யதைப் பார்த்திருக்கிறோம். இத்தகைய மிருகங் களையும், இலங்கை இராணுத்தையும் ஒப்பீடு செய்யும் போதுதான் மனிதர்களாகும் மிருகங் கங்கள், மிருகங்களாகும் மனிதர்கள் என்ற தலைப்பு எனக்குள் உருவாக்கம் பெற்றது.

# ஐயோ கடவுளே!

உலகநேயன்

கடவுளே! நீங்கள்
பார்வையுள்ள மனிதர்களைப்
படைத்ததன் காரணமென்ன?

உங்களால் படைத்ததாகக் கூறப்படும்
கதிரவனின் ஒளியையும்
நிலாவின் வெளிச்சத்தையும்
பார்க்கத்தானே கடவுளே!

நீங்கள் பார்வையற்ற மனிதர்களைப்
படைத்ததன் காரணமென்ன கடவுளே?
பார்வையற்ற விழிகளால்
கண்ணீர் சிந்தவா?

பார்வையுள்ள மனிதர்கள்
இரத்தம் சிந்தி இறக்கும்
இறுதிநேர உயிர்துடிப்பின்
மனித வதைகளைப்
பார்த்துக் கொண்டே கடவுளே
உயிர் வாழ்வதற்காக உண்ணுகின்றார்கள்.

நீங்கள் பார்வையற்ற விழிகளைப்
படைத்ததன் காரணம்
பார்க்க முடியாத கொடிய அவலங்களைப்
பார்க்காமல் இருக்கட்டும் என்பதற்க்காகவா
கடவுளே!

நடக்க முடியா வலுவற்றவர்கள்
மின்சார வண்டியில்
கையில் தொலைபேசியில்
கதைத்து சிரித்து சென்றதை
பாரீஸ் மாநகரில் பார்த்தேன்- கடவுளே!

உலக மனிதர்களுக்கெல்லாம்
நீங்கள் பொறுப்புள்ள தந்தையல்லவா?
கண்டு பிடித்த விஞ்ஞானிகளுக்கு நன்றி
சொன்னீர்களா?
விஞ்ஞானிகளைப் படைத்ததும்
நீங்கள்தான் என்று சொல்லப்போகின்றீர்களா?

உங்கள் படைப்பிலும் பாரபட்சத்தைக்
காட்டி விட்டீர்கள் - கடவுளே!
பணக்கார வீட்டு நடக்கமுடியாத சிறுவன்
பயணிப்பான் மின்சார வண்டியிலே
ஏழைவீட்டு நடக்க முடியாச்சிறுவன் எதில்
பயணிப்பான் - கடவுளே!
கைகளையும் கால்களாக்கி
உடம்புதேய உடம்பை வருத்தி
அரக்கித்தான் நடக்க முடியும் கடவுளே!

உலக இயக்கத்திற்கு மூலமானவர்
நீங்களல்வா?
மனிதர்களிலேற்பட்ட வெறுப்பினால்
உங்கள் இயக்கத்தை நிறுத்திவிட்டீர்களா!
நோயையும், மாத்திரையையும்
கொன்றவனையும், கொல்லப்பட்டவனையும்
நல்ல, தீய அரசியல் வாதிகளையும்
ஆக்க பூர்வ, அழிவு பூர்வ விஞ்ஞானிகளையும்
போரையும், சமாதானத்தையும்
எல்லாவற்றின் உருவாக்கமும் நீங்கள்தானே?
எல்லாம் வல்ல உங்களால்
தீயனவற்றை தடுத்திருக்கலாமல்லவா?

மதவாதிகள் நல்லனவற்றின்
படைப்பெல்லாம் கடவுளே என்கின்றார்கள்.
அறிவு ஜீவிகளோ கடவுளை படைத்தவரும்
மனிதர்களே என்கிறார்கள்
இந்த இடத்தில்
ஐயோ கடவுளேயென
விழிக்காமல் எப்படி விழிக்க?



# வாத்தியாரும் கழுதையும்

பாரிசிலிருந்து அப்பையா

வாத்தியார்: வணக்கம் கழுதையாரே...

கழுதையார்: வணக்கம் வாத்தியார் சொல்லும் ஏதோ இழுக்கிறீர்...

வாத்தியார்: உம்மைக்கண்டவுடனை கேள்வி துளைச்சுக் கொண்டு வருகுது பாரும்.

கழுதையார்: நீங்கள் கேள்வியள் கேக்கிறதிலை கொட்டிக்காரன். பதில்தான் உங்களிட்டை இல்லையெண்டு எனக்குத் தெரியும். சரி கேள்வியை கேளும்...

வாத்தியார்: அதேன் கழுதையாரே 'கழுதை தேஞ்சு கட்டெறும்பான கதை' யெண்டு சொல்லுறது...

கழுதையார்: அதேன் வாத்தியாரே 'மனிதன் தேஞ்சு மண்ணான கதை' யெண்டு சொல்லுறது

வாத்தியார்: அப்படியும் ஒண்டு இருக்கா எனக்குத்தெரியாமல் போச்சே...

கழுதையார்: நீங்கள் உங்களுடைய தவறுகள் பற்றி சிந்திக்கிறது கிடையாது. எப்பவும் மற்றவர்கள் மீதும் உங்களுக்கு சேவகம் புரியிற மிருகங்கள் மீதும் தான் குற்றம் சாட்டிறியள். உங்களைப்பற்றி நீங்கள் குற்றம் சாட்டி பேச மாட்டியள். எப்பவும் உங்களுக்கு நீங்கள்தான் உலகத்தின்ரை கதாநாயகர்களெண்ட நினைப்பு ஆனால் உலகம் போற போக்கைப்பார்த்தால் மனிதன் தேஞ்சு மண்ணான கதையென்பது உண்மை வாத்தியாரே.

வாத்தியார்: சும்மா ஒரு மன ஆறுதலுக்கு உம்மோடை கதைக்க வந்தால் பயமுறுத்துறீர் கழுதையாரே...

கழுதையார்: நான் பயமுறுத்தேல்லை. உண் மையைத்தான் சொல்லுறன். இந்த உலகத்தை அழிச்சுக் கொண்டுவாறது மிருங்களாகிய நாங்களா இல்லை மனிதர்களாகிய நீங்களா?

வாத்தியார்: அதிலை என்ன சந்தேகம் நாங்கள்தான் கழுதையார். உண்மையை ஒத்துகொள்ளத்தான் வேணும். உண்மையை மறுத்துப் பேசிறதாலை மட்டும் உலகத்திலை ஒரு நல்ல மாற்றமும் நடந்திடாது.

கழுதையார்: நாங்கள் எங்கையாவது கொக்கக் கோலா, பியரை எங்கையாவது குடிச்சதை கண்டியளா?

வாத்தியார்: நாங்கள் தந்தால் நீங்களும் குடிப்பி யள்தானே

கழுதையார்: நாங்கள் வெறும் குளத்துத் தண்ணியை குடிச்சிட்டுத்தான் பொதியளை சுமக்கிறம். நீங்கள் மாட்டுக்கு புண்ணாக்கு வைக்கிறதே மாடுகள் வயலை உழும், பால்தரும் என்னிறதாலை தான். எங்களாலை ஏதாவது பயனில்லாட்டி நீங்கள் எதையும் தரமாட்டியள்.

வாத்தியார்: கழுதையார் இண்டைக்கு நீர் மதிப்புக்குரிய மனித குலம்மீது குற்றம் சாட்டுறதுக்கெண்டே வெளிக்கிட்டு வந்தமாதிரி இருக்கு.

கழுதையார்: உண்மை கொஞ்சம் உறைக்குது போல இருக்கு... நீங்கள் கொக்ககோலாவை குடியுங்கோ, பியரை குடியுங்கோ இதாலை எங்களுக்கு ஒண்டுமில்லை ஆனால் குடிச்சிட்டு எங்கை எறியிறியள் எண்டதுதான் பிரச்சினை இதுகளெல்லாம் நிலத்துக்கடியிலை போனால் பல வருடங்களானாலும் உக்காது. இதானல் சூழல் மாசடைஞ்சு கொண்டு வருகுதெண்டு தெரிந்தும் நீங்கள் செய்யிறியள். சிகரெட்டுப் புகை உங்களை மட்டுமில்லை சுவாசிக்கிற நல்ல காத்தையே அசுத்த மாக்கிக் கொண்டு வருகுது. நீங்கள் தொடங்கி வைச்சிருக்கிற யுத்தத்தாலை நச்சு கந்தகப்புகை உலகமெல்லாம் பரவிக்கொண்டு வருகுது. இதாலை உங்களுக்கு மட்டும் கெடுதல் இல்லை. மிருகங்களாகிய எங்களுக்குத்தான் கெடுதல் உங்களோடை சேர்ந்து நாங்களும் நோயாளிகளாக வேண்டியதுதான். நீங்கள் வாழ்ந்திட்டு போடுவியள் உங்களுடைய குழந்தைகளைப் பற்றியும் சிந்தியுங்கோ உங்கடை பிள்ளையள் இந்த உலகத்தை விட்டா எங்கே போய் சீவிக்குங்கள்?

வாத்தியார்: மனதிலை உறைக்கிற மாதிரி பெரிய விளக்கம் தந்திருக்கிறீர் கழுதையார். உண்மைதான் கொக்கக்கோலாவை குடிச்சிட்டு எறியிற அந்த நிமிடத்திலை சிந்திச்சா அதை போடவேண்டிய இடத்திலை போடலாம். சிகரெட் ஒவ்வொருத்தரும் தாங்கள் தங்களுடைய குழந்தைகளை நோயாளியாக்கிறம் என்று நினைத்து சிகரெட்டை நிறுத்தலாம். யுத்தங்களை நடத்திக்கொண்டிருக்கிறவர்கள் இந்த உலகத்தையும் மனித குலத்தையும் பாதுகாக்க வேணுமெண்ட மானிட நேயமுள்ளவர்களாக மாறினால் இந்த அழிவிலிருந்து இந்த உலகத்தை காப்பற்றலாம். கழுதையாரே நீரும் நானும் சிந்திக்கிறதை போலை ஒவ்வொரு மனிதனும் இதை சிந்திக்க வேணும்.

கழுதையார் வருவார்...

# மார்படைப்பு வியாதி வராமல் இருப்பதற்கான சில அறிவுரைகள்

சா. சிறிகாந்தன்

எமக்கு மார்படைப்பு வியாதி வராது என எண்ண வேண்டும்.

மார்புப் பகுதியில் வலி இருந்தால் பயப்படக்கூடாது.

இரத்த அழுத்தத்தைச் சரியான அளவில் வைத்திருத்தல் வேண்டும்.

உணவிலே உப்பைக் குறைப்பதுடன் வாயுத்தொல்லை தரும் உணவுகளையும் தவிர்த்து விட வேண்டும்.

கொழுப்புச்சத்துமிகுந்த உணவு பன்றி இறைச்சி, ஆட்டிறைச்சி, முட்டை மஞ்சட்கரு என்பவற்றைத் தவிர்க்கவும்.

புகைத்தல், மது அருந்துதலையும் தவிர்த்தல் அல்லது குறைத்தல் அவசியம்.

தேகப்பயிற்சி, நடந்துஉலாவி வருதல், சுத்தமான காற்றுச் சுவாசிப்பு என்பற்றைத் தினம் கடைப்பிடிக்கவேண்டும்.

உடலுறவை அளவுடன் வைத்துக்கொள்ளவேண்டும். வாரம் ஒரிருமுறைகள் உகந்தவை. வயதானவர்கள் இதைக் குறைத்துக்கொள்ளவும்.

# வளர்ந்து வரும் தமிழ்க் கால்பந்தாட்ட விளையாட்டு வீரன்

சந்திப்பு : அன்பரசி

அழைப்பு மணியை அழுத்துகிறோம், கட்டிளம் பருவ இளைஞரொருவர் மரியாதையும், கொஞ் சம் வெட்கமும் கலந்த முகபாவத்தோடு எங்க ளை வரவேற்கின்றார். அவரின் கால்பந்தாட்ட கடின பயிற்சி அவரது உடலை வடிவமைத்து அவர் விளையாட்டு வீரன்தான் என்பதை சொற் களின் தேவையின்றி சொல்லுகின்றது. வரவேற் பறைக்குள் நுழையும் போது வெற்றிக் கிண்ண ங்கள் ஒன்றேடொன்று முட்டியவாறு கண்ணாடி அலுமாரியினுள் இருந்தவாறு வரவேற்பறையை அழகுபடுத்துகின்றன.

Stage été- Hauteville 2011



உங்களின் பெயரென்ன என்று கேட்கின்றேன்? நிரோசனென சிரித்த முகத்தோடு பதில் சொல் கின்றார். எத்தனை வயதென்று கேட்கின்றேன்? பதினேழு என்று சொல்லிவிட்டு அந்த இடத் தைவிட்டு நழுவப் பார்க்கின்றார். அவர் கால் பந்தாட்டத்தை விடாப்பிடியாக விளையாடி வரு கிறார்தான். ஆனால் வணக்கவொளியில் தன் னைப்பற்றிய குறிப்பு வர வேண்டுமென்பதில் தற்பொழுது ஈடுபாடில்லை. அவர் வயதிற்கேற்ற குணநலனோடு இருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டேன். அவருடைய தாயார் நி.முகுந்தினி அவர்கள்தான் மகனின் விபரங்களைச் சொல் லுகின்றார். ஆறு வயதிலிருந்தே நல்லூர்ஸ்தா ன் விளையாட்டுக் கழகத்தில் விளையாடி வருகின்றார். u.s evry எனும் கழகத்திலும் விளையாடி வருகின்றார் 2011இல் ஒலிம்பிக் லியோனே (O.L) கால்பந்தாட்ட பயிலகத்தில் பயிற்சி பெற்றிருக்கின்றார்.

உங்களுக்கு அம்மாவா அப்பாவா ஒத்துழைப்பு தருகின்றார்களென கேட்ட போது, அப்பா என ஒரு சொல்லில் பதில் தருகின்றார். (அம்மாவின் முகத்தைப் பார்க்காமல்) தாய்மார் தங்களில் வைத்திருக்கும் அன்பை பிள்ளைகள் சீண்டி விட்டு அறிவதுமுண்டு. இவரும் அந்த வகை தான் புரிந்து கொள்கிறேன். அப்பா எங்கே யெனக் கேட்டேன். முகுந்தினி அவர்கள்தான் பதில் சொல்கின்றார். அப்பா விடியற்காலை யிலேயே எழுந்து சின்ன மகனை அழைத்துக் கொண்டு கால்பந்தாட்டப் பயிற்சிக்குச் சென்று விட்டார். அவர்தான் பிள்ளைகளுக்கான முழு ஒத்துழைப்பையும் கொடுக்கின்றார். நித்தி நிரோ சனுக்கு சொல்லியிருக்கின்றார். கால்பந்தாட்ட போட்டியில் விளையாடும் போது எனக்கு திடீரென கடுமையான வருத்தமென்றால் கூட விளையாட்டை முடித்து விட்டுதான் என்னைப் பார்க்க வரவேண்டுமென கூறியிருக்கின்றார். பதினேழு வயதில் நிரோசன் சிறந்த விளையா ட்டு வீரனாக வந்திருப்பதற்குரிய காரணம் தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது. திரு. நித்தி அவர்களுக்கு நிரோசனை சிறந்த விளையாட்டு வீரனாக ஆக்கவேண்டும் என்பதிலிருக்கும் உறுதிப்பாடு நி. முகுந்தினி அவர்களின் முகத் திலும் பளிச்சிடுகின்றது.

அவர் தன் மகனைப்பற்றிய முழு விபரங்களை யும் தந்து விடுவதில் ஆர்வம் காட்டுகின்றார். நிரோசன் இலண்டன் கழகங்களோடும்

விளையாடி வருகின்றார். அத்தோடு சுவிஸ், டென்மார்க் சென்று தமிழ் விளையாட்டுக்கழகங்களிலும் விளையாடி வருகின்றார். தற்பொழுது நடுவராக கடமையாற்றும் தகுதியையும் பெற்றிருக்கின்றார். நாம் விடைபெறும் நேரத்தில் கால்பந்தாட்டத்தில் உங்கள் குறிக்கோள் என்ன என்று கேட்டேன்? பிரான்சில் விளையாடுவது என்று சொல்கின்றார். தமிழ்மொழியில் தனது மனத்தின் விருப்பத்தை வெளிப்படுத்துவதில் சிரமப்படுகின்றார். நான் அதை புரிந்து கொண்டு வாழிட மொழியில் பிரான்சில் தேசிய அளவில் ஒரு வீரனாக வரவேண்டுமென்று விரும்புகிறீர்களென்ற போது, ஆம் என உறுதியோடு தலையை அசைத்து சொல்லுகின்றார்.

நாம் நி.நிரோசனை கைகளைத்தட்டி உற்சாகப் படுத்துவோம்.

# அறம்

குசதர்ப்பையைத் தவறாகப் பிடித்தால் அது பிடிக்கும் கைகளை அறுத்து விடும், இதைப் போன்றே துறவறத்தைத் தவறாகக் கடைப் பிடிப்பதால் ஒருவன் நரகத்தையே அடைகிறான்.

- புத்தர் -

அறத்தை நம்பாதவர்கள் சாவோடு சேர்ந்த தீய வாழ்க்கையிலேயே அமிழ்கிறார்கள்.

- யாரோ -

அறம் தவறாக ஆளப்பட்டால் மறமாக மாறுகின்றது. மறம் சில சமயம் செயலால் செம்மையுறுகின்றது.

- செகசிற்பியர் -

ஆறுகள் எங்ஙனம் கடலிற் உருக்குலைகின்றனவோ அங்ஙனமே அறம் தன்னலத்துடன் கலந்து உருக்குலைகின்றது.

- பூங்கோவா ரோஷ் -

உன் சக்திக்கேற்றவாறு, மாதந்தோறும் அல்லது தினந்தோறும் ஒரு சிறு தொகையை தரும விடயத்தில் செலவு செய்!

- சுவாமி சிவானந்தர் -

அறத்தால் வருவது இன்பம்

- வள்ளுவன் -

சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு.

- வள்ளுவன் -

நமது ஆன்மா விடுதலை பெறத் துணைபுரிவது துறவறமன்று, ஒவ்வொரு நாளும் தர்மஞ் செய்வதே.

- ஸ்வீடன் பர்க் -

தர்ம வாழ்வின் அளவுகோல் விசேட முயற்சிகள் அல்ல தினசரி வாழ்க்கைதான் அளவுகோல்

- பாஸ்கல் -

அறம் எதுவென்று அறியாவிட்டாலும், அறிந்த வரையில் அதில் ஆசைகொண்டால் தீமையை எதிர்க்கும் சக்தியில் இணைந்தவர்களாவோம்.

- ஜோர்ஜ் எலியட் -

அறநெறிக்குப் பட்டினி எவ்வளவு அவசியமோ, அதேபோல் தீ நெறிக்குப் பெருந்தீனி இன்றியமையாதது.

- ரால்ஸ் டோய் -

அறத்தை நேசி! அது தனிமையில் இருக்கின்றது. எப்படி முன்னேற வேண்டும். என்பதை அது கற்பிக்கும்.

- மில்டன் -

# நேசமுள்ள வாசகர்கள்

வேலைப்பழுவையோ, நேரமின்மையையோ, அலுப்பையோ எதையும் பொருட்படுத்தாமல் அருமையான ஆக்கங்களை வாசர்களாகிய எமக்களிக்கும் வணக்கவொளி குழுமத்திற்கு என் சிரம்தாழ்த்திய வணக்கங்களும் நன்றிக ளும், வணக்கவொளியில் பல்சுவை ஆக்கங்க ள் இணைக்கப்படுவதோடு 'வளரும் பயிர்கள்' என்ற புதிய எழுத்தாளருக்கான பகுதியும் 'நேசமுள்ள வாசகர்கள்' என்ற வாசகர் கருத்துப் பகிர்வு பகுதியும் அமைவது பராட்டப்பட வேண்டியதொன்றாகும். அதே போன்று பிரான் சு நாட்டில் வாழ்ந்தாலும் அனேகமானோருக்கு மொழிச்சிக்கல் இருப்பதனால், நடைமுறையில் அமுலாக்கப்படும் சட்டதிட்டங்கள் பற்றிய குறிப்புகளும் இணைக்கப்படுமாயின் பலருக்கு அது உதவிபுரியும். அத்தோடு சிறுவர்களையும், இளையோர்களையும் உள்வாங்கக்கூடிய ஆக் கங்களும் இடம்பெறுமாயின் இன்னும் மெருகே றும். வணக்கவொளியே! உன்னை வராந்த இதழாகவோ, மாதாந்தஇதழாகவோ வாவென் று கேட்கின்றேன் வணக்கவொளியே! நீ என் கையில் வந்தால் இடிவிழினும் நான் அவ்விடத்தை விட்டகலேன், உன் கதிரொளி தனை என்னிடத்தே நுகரும் வரை.

**தமிழ்வாணி**

வரும் இதழில் ஆன்மிகம், மருத்துவம், கேள்வி பதில் பகுதிகள், வெளிநாட்டில் வாழும் தமிழ ர்களின் அனுபவங்களை பகிர்தல் போன்ற ஆக்கங்களை இணைத்தால் பெரும் வரவேற்பு க்குரியதாக இருக்கும் வாழ்க வணக்கவொளி! வளர்க வணக்கவொளி!

**திருமதி. காந்திமதி நடராஜா**

வணக்க ஒளி ஒரு வணங்கும் ஒளியாக நம்மில் ஒளிந்து கிடக்கும் அறியாமை என்னும் இருளை விலக்கி ஒளியூட்ட முனைகிறது. முடியாது என்ற விடயங்களை முடிய வைத்த பெருமை இவ்வணக்க ஒளி விரைவில் எட்டும். அது இவ்விதழின் வரிகளில் ஒளிந்து கிடக்கும். வளர்க வணக்க ஒளி.

**கிருபாரணன்**

பிரான்சு நாட்டில் தமிழ்மொழி, தாய்நிலப் பற்றோடு வெளிவரும் வணக்கவொளி காலாண் டிதழின் ஆசிரியர் திரு.பாஸ்கரன் அவர்கள் மிகவும் பாரட்டுக்குரியவர். கலை, இலக்கியம், பொருளாதாரம், உளவியல், தொழில் நுட்பத்துட ன் வெளிவரும் வணக்கவொளியின் வாசகன் என்ற முறையில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தங்களின் காலாண்டு இதழ்பூத்ததில் மகிழ்ச்சி தரமான ஆக்கங்கள் இடம்பெறவேண்டும் என்ப து விருப்பம். உங்களின் முயற்சிக்கு பாராட்டு க்கள். தொடரட்டும் உங்களின் பணி.

**ஜெயம்**

# சுவையான செய்திகள்

## சுயபோதனை

சுயமாகக் கற்றுக் கொள்ளுங்கள் என்றொரு புத்தகத்தைப் பிரெஞ்சுப் பதிப்பகம் ஒன்று வெளியிட்டது. 200பக்கங்கள் கொண்ட புத்தகம் இது அச்சிடப்படாமல் அத்தனை பக்கங்களும் வெள்ளைத்தாளாகவே இருந்தன. புத்தகத்தின் முகப்பில் உங்கள் எண்ணங்களையெல்லாம் எழுதிகொண்டு வாருங்கள் அதுவே சிறந்த கல்வியாகும்.

## அதியக்கோயில்

ஜப்பான் நாட்டிலுள்ள சியோட்டோவில் உலகத்திலேயே அதிசயமான கோயில் ஒன்று உள்ளது.389 அடி நீளமும் 57அடி அகலமும் கொண்ட பெரிய கோயில் இது. ஜப்பான் மக்கள் கருணைத்தெய்வமெனப் போற்றும் க்வன்னா னின் சிலைகள் இதில் உள்ளன. இவ்வளவு அதிகமான சிலைகள் கொண்ட ஆலையம் உலகில் வேறெங்கும் கிடையாது.

எஸ்.சங்கரன்

## ஞான மொழிகள்

(இதயத்தின் இரகசியம்)

மிகப்பெரிய அறிவைப் பெற்றும் சோம்பேறியாய் செயலற்று இருப்பதிலும், கொஞ்சம் அறிவுடன் செயலாற்றுவது சாலச் சிறந்தது.

மேன்மையான பொருளில் நம்பிக்கை வைத்து, அதை செய்து நிறைவேற்றுவதே பலப்பரீட்சை, பெரும்பான்மையானவர்கள் கடலின் கர்ஜனை போல் பேசுவார்கள். ஆனால், அவர்களது வாழ்க்கை ஆழமற்ற குட்டையாய், தேங்கிக் கிடக்கும், சகதியாய் இருக்கும், நாற்றமடிக்கும். பெரும்பான்மையான மக்கள் தங்கள் தலையை மலைச்சிகரத்திற்கும் மேலே உயர்த்துவர். ஆனால் அவர்களின் உள்ளுணர்வு, ஆத்மா, குகைகளிலே கண்ணுக்குத் தெரியாமல் தூங்கிக்கொண்டிருக்கும்.

## அயற்சொல் – தனித்தமிழ்

| | |
|---|---|
| அசடு | - பேதைமை, மடம்,அறியாமை |
| அசிங்கம் | - அழகின்மை,அருவருப்பு,மாசு |
| அசுரன் | - அரக்கன் |
| அட்டகாசம் | - கடுஞ்சிரிப்பு |
| அத்தாட்சி | - மெய்ச்சான்று |
| அத்தியாயம் | - நாற்பிரிவு,படலம் |
| அதிபர் | - அதிபதி-தலைவன் அரசன் |
| அதிர்ஸ்டம் | - நல்வாய்ப்பு |
| அதிருப்தி | - மனக்குறை,மனநிறைவின்மை |
| அந்தரங்கம் | - கமுக்கம்,உள்ளம்,உட்கருத்து |
| அந்தஸ்து | - நிலை,தகைமை,மேனிலை |
| அந்தரம் | - வெளி,வான்,நடு |
| அசம்பாவிதம் | - நேரக்கூடாதது |
| அதிகப்பிரசங்கம் | - மிகைப்பேச்சு |

# ஊக்குவித்தல் என்னும் மந்திர சாவி!

சி. எஸ். தேவ்நாத்

செயல் தூண்டல் என்றால் என்ன?
என்னுடைய தந்தையின் ஊக்குவிப்பில் நான் களத்தில் இறங்கினேன் என்பார் டென்னிஸ் வீரர் ரமேஷ் கிருஸ்ணன்.
நான் கிரிக்கெட் மட்டையைக் கையிலெடுக்க என்னுடைய அப்பாதான் காரணம் என்பார் சச்சின்டெண்டுல்கர்.

செயலுக்கான தூண்டுதல் உணர்வை அப்பாவிடம் இருந்தும் பெறலாம், அம்மாவிடம் இருந்தோ ஆசிரியரிடம் இருந்தோ, தங்களுடைய மேலதிகாரியிடம் இருந்தோ பெறமுடியும்.


செயல் தூண்டல் உணர்வு உங்களை ஊக்குவிக்கிறது. உங்கள் மூலம் ஓராயிரம் பேருக்கு உந்து சக்தியை அளிக்கிறது! எந்தச் செயலுக்கும் பின்னணியில் ஒரு தூண்டுதல் தேவைப்படும். விளையாட்டு மைதானத்தில், பள்ளிக் கூடத்தில், தொழிற்சாலையில் இப்படி எங்கும் அது தேவைப்படுகிறது. ஒரு விற்பனை மேலாளர் தம்முடைய விற்பனை ஊழியர்களை ஊக்குவித்தால்தான் விற்பனைக் குறியீட்டளவை எட்ட முடியும். நீண்ட தூர ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்கிறவர் அதிகாலைப் பயிற்சியில் ஈடுபட ஊக்குவிப்பு தேவை.

உயிர்வாழ்வதற்குப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து, உறைவிடம் இப்படியானவை அவசியம், அடிப்படைத்தேவைகள் இவை, செயல் தூண்டலில் இவற்றைப்பூர்த்தி செய்துகொள்வது முதல் நிலையாகும் இவை பூர்த்தியானதும் சாதனை புரிதல், உணர்வு சார்ந்த நிறைவு, சுயவளர்ச்சி, சுயதகுதி போன்றவை பக்கம் கவனம் திரும்பும் ஊக்கம் என்பது பொதுப்படையானதல்ல, அது தானாக மனதில் எழுவது பிறர் ஒருவரை செயலுக்குத் தூண்ட எது தேவை, எப்போது தேவை என்பதை அறிய வேண்டும். ஊக்குவிப்பு பிரச்சினை எல்லோருக்கும் இருக்கிறது. அடுத்தவரை ஊக்குவிக்க வேண்டிய அவசியத்தில் நாம் இருக்கிறோம். நாம் விரும்பிய விதத்தில் காரியங்களை நடத்திக் கொள்ள அவர்களைக் ஊக்குவித்துதான் ஆக வேண்டும்.

× குறிப்பிட்ட காலக்கெடுவில் எட்ட வேண்டிய உற்பத்தி அளவை உங்கள் ஊழியர் எட்டத் தவறிவிடும் நிலையில்,
× தங்களுக்குச் கொடுக்கப்பட்ட வீட்டுப் பாடத்தையோ, தங்களுடைய அன்றாடக் கடமைகளையோ உங்கள் குழந்தைகள் தவிர்க்க முனைகின்றபோது,
× நிதி திரட்டும் ஒரு குழுவில் தலைவராக நீங்கள் இருக்கின்றபோது,
× நீங்கள் ஒரு ஆசிரியராயிருந்து உங்கள் மாணவர்களை இன்னும் மேம்படுத்த முனைகின்றபோது

ஊக்குவிப்பு அவசியமாகிறது.

ஊக்குவித்தல் ஒரு தொடக்க, காலை எழுந்ததில் இருந்து, இரவு படுக்கைக்குச் செல்லும் வரை நீங்கள் அடுத்தவரை ஊக்குவிக்கின்ற சூழ்நிலைகள் அநேகம். ஊக்குவித்தல் என்பது பல்லைப் பிடுங்குகின்ற மாதிரி பலருக்கும் சிரமமான காரியமாய்படுகிறது. அநேக உத்திகள் இருக்கின்றன. தகுந்ததாய் ஒரு சிலவற்றைப் பயன்படுத்தலாம் உங்களால் உந்தப்பட்டவர் நீங்கள் எதிர்பார்க்கும் விதத்தில் உங்கள் காரியத்தைச் செய்து முடிப்பதோடு தங்களுக்குக் கிடைத்த சலுகைக்காக உங்களுக்கு நன்றி கூறவும் செய்வார்கள்.



# 'அ' க்களும் 'மு' க்களும்

தமிழ்த்தம்பி

வேலை முடிந்து நித்திரை தூக்கத்தில் ஒரு அரை உயிரின் வலுவோடு வீடு வந்து சேர்ந்தாகிவிட்டது. இரவை பகலாக்கி வேலை செய்து முடித்தாகி விட்டது. இனி பகலை இரவாக்கி நித்திரை கொள்ளவேண்டும். மனைவி சாப்பிட்டு விட்டு படுங்கோ... என்ற போதுதான் சாப்பிட வேண்டுமென்பது நினைவுக்கு வந்தது. மனம் மகிழ்ச்சியாக இருந்தால் அன்றாட செயல்கள் எல்லாம் நினைவில் இருக்கும். மனம் செத்து சோர்ந்து போய் இருக்கும் போது சாப்பிட்டாலும் சாப்பிடாமல் விட்டாலும் இரண்டும் ஒன்றுதான். இதனால் தான் வன்னியில் உக்கிரசண்டை நடந்து கொண்டிருந்தபோது பல புலம்பெயர் தமிழ் உறவுகள் உண்ணாமல் இருந்தார்கள் போல் இருக்கின்றது.

படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துப் பார்க்கின்றேன். மனத்தில் அமைதி இருந்தால் தான் உறக்கம் வரும். நாம் சுக, துக்கங்களுக்கு ஆளாக்கப்படும் போது தான் எமது உறவினர்களை, நண்பர்களை மனம் நினைத்துப் பார்க்கும். என்னவோ பழைய நண்பர்கள் நினைவுக்கு வந்தார்கள். கணேஸ் என்ற பழைய நண்பனைப்பற்றி எனது சிந்தனைகள் வட்டமிடுகின்றன. அவருடைய தோற்றம் எனது நினைவிற்குள் வருகின்றது. மேவி இழுத்த தலை, வெள்ளை நிறம், கெவட்டை கால்கள் என்று சொல்லுவர்கள். நடக்கும் போது அப்படி இருக்கும். படித்தவன் போன்ற நடைஉடை பாவனைகள், எவருக்கும் இலகுவில் பிடித்து விடும். அவர் வேலை செய்யும் இடங்களில் பிரெஞ்சுப் பெண் ஒருவரும், மொறோக் பெண் ஒருவரும் தன்னை விரும்பிப் பழகுவதாக அவரே சொல்லிக்கொள்ளுவார். ஆனால் இந்த பலவீனமே பாரீசு, கொலன்டென அலைக்கழிக்கப்பட்டு இறுதியில் மனநலக்காப்பகம் ஒன்றில் கொண்டு போய் சேர்த்துவிட்டது. உக்கிர சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தபோதுதான் இந்த நண்பன் நினைவிற்குள் வந்தான். கணேசிற்கு என்ன ஆச்சுதோ? என கவலை பெருமூச்சொன்றை விடுவதை தவிர வேறு வழியில்லை.

நித்திரை வருமாப்போல் இருந்தது, கைத் தொலைபேசியின் இனிய இசைக்கு பிறகு ஒரு சோகக் குரலொன்று வெளிப்பட்டது. ஆனந்தனின் குரலென்று அடையாளம் கண்டுகொண்டேன். என்ன செல்வா நம்பிக்கை யெல்லாம் விணாய்போச்சு, சனம் கொத்துக் கொத்தாகச் செத்துக் கொண்டிருக்கு, அவருடைய குரல் துண்டு துண்டாக வந்து விழுந்த போது அவர் அழுகையை அடக்க முயற்சி செய்தும் கட்டுப்படுத்த முடியவில்லை. ஒரு இடைவெளியின் பின் சற்று நிதானப்படுத்திப் பேசினார். இருபது நாடுகள் உதவியுடன் சேர்ந்து நின்று அடித்தா இயக்கம்தான் என்னசெய்கிறது? நாங்கள் நாலு கள்ளர் சேர்ந்து சங்கிலியைப் பறிச்சாக் குடுத்திட்டுத்தான் போவோம். எப்பவும் பட்டறிவோடும் நகைச்சுவையோடும், சிரித்த முகத்தோடும் பேசக்கூடிய ஆனந்தன் அழுததை நான்முதல் தடவையாக கேட்டேன். இந்த இடத்தில் நான் கதைப்பது எதுவென்று தெரியாமல் கணேசைப்பற்றி ஏதாவது தெரியுமா என்று கேட்டேன். செல்வா... சனமெல்லாம் (metro Invalides) க்கு போய்க்கொண்டிருக்கு நீயும் வாறியா? படுக்கையிலிருந்து எழுந்து அங்கே சந்திப்போம் என்றேன்.

கணேசைப்பற்றி ஆனந்தன் இப்போ முக்கியப் படுத்தவில்லையென்பதை புரிந்துகொண்டேன். மின் இழுவைப் படியில் ஏறியபோது இளம் தமிழ்ப்பெண் உணர்ச்சியும், கவலையும் கலந்த குரலில் இனியும் பார்த்துக்கொணடு இருக்கே லாது! என பக்கத்தில் நின்றவரிடம் தனது உணர்வை பகிர்ந்து கொண்டு நடந்து சென்றார்.

கிட்டத்தட்ட ஐந்நூறு தமிழ்மக்கள் கூடியிருந் தார்கள். வந்தவர்கள் தமது நண்பர்கள், உறவினர்களுக்கெல்லாம் தொலை பேசியில் அழைப்பு விடுத்தும் குறும் செய்திகளை அனுப் பிய படியும் இருந்தார்கள். பாரீசை சுற்றியுள்ள நாலு பக்கங்களிருந்தும் தமிழ் உறவுகள் கூடிக்கொண்டிருதார்கள். சனங்களின் வருகை யை அடுத்து போலீஸ் பேரூந்தொன்றும் எம தருகே கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. ஒரு தமிழ் மாணவன் பொலீசாரால் அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டான்.

நீங்கள் அனுமதி இல்லாமல் இங்கே கூடியிரு க்கிறீர்கள் இந்த இடத்தைவிட்டு கலைந்து செல்லும்படி அறிவுறுத்தப்பட்டதாகவும் தான் வன்னியில் எமது உறவுகள் கொல்லப்படுவதை தடுத்து நிறுத்த உதவுமாறு பிரான்சு அரசாங் கத்திடம் இங்கு கூடியிருப்பவர்கள் கேட்கிறார் கள். தான் சொல்வதை அவர்கள் கேட்கமாட் டார்கள் எனக் கூறியதாகவும் சொன்னார். என்னைச் சுற்றி இருந்தவர்களைக் கூர்ந்து கவனித்தேன். ஒரு நிறைமாதக் கர்பிணிப் பெண்கூடி செத்த வீட்டிலிருப்பதை போன்ற கவலையோடு தலையை குனிந்தவாறு இருந் தார். பக்கத்திலிருந்தவர்கள் பேசுவதற்கு நிறை ய இருந்தும் பேசமனமின்றி கல்லென அசைவ ற்று இருந்தார்கள். ஆனால் இளைஞர்கள் இளமைத் துடிப்போடு செயற்பட்டார்கள் எல் லோருக்கும் தண்ணீர்ப்போத்தல்கள் கொண்டு வந்து குடிக்கக் கொடுத்தார்கள் யுத்தக்காட்சி களையும் திரையிட்டுக்காட்ட முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். மழை தூறத்தொடங்கியது. கூடியிருந்த மக்கள் மழை பெய்யும் உணர்வே இல்லாமல் உட்கார்ந்து இருந்தார்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ்உறவு களெல்லாம் அந்த அந்த நாடுகளின் முக்கி யமான இடங்களில் கூடியிருப்பதாக செய்திகள் வந்த வண்ணமே இருந்தது.

தொடரும்...

## ஈழத்து நாட்டார் பாடல்கள்

மகாவித்துவான் F.X.C நடராசா

ஆக்காண்டி ஆக்காண்டி
எங்கெங்கே முட்டை வைத்தாய்
கல்லைப் பிளந்து கடலருகே
முட்டை வைத்தேன்
வைத்ததுமோ நாலுமுட்டை
பொரித்ததுவோ மூன்று
மூத்த குஞ்சுக்கு இரைதேடி
மூன்றுமலை சுற்றிவந்தேன்
இளைய குஞ்சுக்கு இரைதேடி
ஏழுமலை சுற்றிவந்தேன்
பாத்திருந்த குஞ்சுக்கிரைதேடி
பவளமலை சுற்றி வந்தேன்
மாயக் குறத்திமகன் வழிமறித்து கண்ணிகுத்தி
காலிரண்டும் பட்டு சிறகிரண்டும் மாரடிக்க
நானழுத கண்ணீரும் குஞ்சழுதகண்ணீரும்
இஞ்சிக்குப்பாய்ந்த இடத்தே
எலுமிச்சை வேரூன்றி
மஞ்சளுக்கு பாய்ந்த இடத்தே
மாதாளை வேரூன்றி
தாழைக்குப் பாய்ந்த இடத்தே
தளம்பினது கண்ணீர்
வாழைக்கு பாய்ந்த இடத்தே
வற்றினது கண்ணீர்

# நாமார்க்கும் குடியல்லோம்

முனைவர் கமலநாதன்

ஈழத்தமிழன் தன் வரலாற்றுத் தொன்மை பற்றியும் உயர்வு பற்றியும் உணரவேண்டிய அகத்தியத்தாலும் இராவண மாமன்னன் முதல் இன்றைய தமிழ்த்தோன்றல் பிரபாகரன் வரை ஈழத்தின் வீரத் தமிழர்களைக் காட்டிக் கொடுப்பதிலும் இழித்துரைப்பதிலும் தமிழகத்தில் மட்டுமல்லத் தமிழீழத்திலும் கூடச் சிலர் ஈடுபட்டுள்ளனர், ஈடுபட்டிருக்கின்றனர், என்கிற குமுறலாலும் பிறந்ததே இந்த நெடுங்கதை.

தமிழீழத்து வரலாற்றுக் குறிப்புகளில், சாலிவாகன சகாப்தம் 717க்குச் சரியான, கி.பி 745 ல் வாழ்ந்ததாகக் குறிப்பிடப்படுகின்ற, உக்கிரசிங்கன், மாருதப்பிரவீகவல்லி, சாம்பசிவ தீட்சதர் ஆகிய சில மாந்தர்களும் அவர்களது பணிகளும் காணப்படுகின்றன. அக்காலத்தும் அதற்கு முன்னரும் உள்ள தமிழீழத்து நகரங்களும் பொருளியல் நிலைகளும் சமயவாழ்வும் வெளியுலகத் தொடர்புகளும் காணப்படுகின்றன. பல தேவாரங்களும் இந்தக் குறிப்புகளைக் கொண்டுள்ளன. அவற்றை ஆதாரமாகக் கொண்டு, உண்மைகளையும் ஊகங்களையம் கற்பனை கலந்து எழுதப்பட்டது இக்கதை.

## வழுக்கையாறு

வழுக்கையாறு வளம் பரப்பிப் பாய்ந்து கொண்டிருந்தது. அஃதொன்றும் புரண்டோடும் காட்டாறு அல்லாவிடினும், குறுகிச் சிறுத்த கால்வாய் போல் தோன்றினாலும், கோவிற்கடவைக்கு வடக்கே கடற்கரையில் இருந்து மணற்றிடர்களின் பின்புறமாக, பல கல் தூரம் அகன்று கிடந்த மண்ணைக் குளிர்வித்து, கழனிகளை வளப்பித்து, அந்நிலப் பகுதியெங்கும் தன்னாட்சியைப் பரப்பிக் கொண்டிருந்தது.

கோவிற்கடவை முதல் சங்குவேலித்துறை வரையும் மட்டுமல்லாமல், அதற்கப்பாலும் உற்பத்திப் பொருட்களின் பெருக்கத்திற்கு ஊன்றுகோலாக நின்று, அப்பாலும் வாழும் மக்களின் உயிரூற்றாகக் காலமறியாமல் கடமையாற்றிக் கொண்டிருந்தது.

அளைவெட்டி (அளவெட்டி) தொள்புரம் (தொல்புரம்) போன்ற பகுதிகளில் பெய்யும் மழைநீர் ஓடைகளாகி, அவை ஒன்று கூடி சூரை வெட்டை (சூறாவத்தை) வரை ஓடி, வடக்கே ஒரு கல் தொலைவில் கசாயத்துறை (காங்கேசன்துறை) அருகே கடல் இருந்தும் கடலில் சேராது, தெற்கு நோக்கித் திரும்பி ஏறத்தாழ பதினைந்து கல் தூரம் ஓடி, மணற்றியின் (யாழ்) மேற்புறத்தில், இரண்டு கல் தொலைவில் (ஆனைக்கோட்டை) கடலில் கலக்கிறது. அப்பகுதியில் மாந்தவளம் பெருகு முன்னிருந்தே இவ்வாறு ஓடி, குடாநாட்டின் நடுப்பகுதிகளில் ஆழமுடையதாக இருந்தது. குடாநாட்டின் நிலவியல்பு கடல் மட்டத்துடன் ஒத்ததாய், அதிக உயரமில்லாத சமநிலமாக இருந்தமையால், நீர்ப்பெருக்குடைய ஆறாக அன்றி, ஆழத் தேங்கி மெல்லெனப் பாயும் ஆறாக இருந்தது. கார் காலத்தில் நீர்கடத்தியாகவும் கோடையில் நீரூட்டியாகவும் பெரும்பணியாற்றிக் கொண்டிருந்தது.

இக்கரணியங்களினாலும் ஏழ்பெருந் தீவுகளுடனான போக்குவரத்தின் கடல்வழிகள் ஆற்றின் கழிமுகத்தையண்டி இருந்தமையாலும் மரக்கலங்களின் நெருக்கமான போக்குவரத்து உடையதாக இருந்தது வழுக்கையாறு.

இவ்வாற்றின் ஆரவாரமும் மிகப் பேசப்பட்ட இறங்குதுறை கதிரைமலை (சுன்னாகம்) ஆகும். கதிரைமலை எப்பொழுதும் பாய்விரித்துப் படரும் மரக்கலங்களின் நெருக்கமுடையதாக இருந்தது.

மணற்றிடர் அல்லது மணற்றிக்கு மேற்கேயுள்ள ஏழ்பெருந் தீவுகளுடனும் தமிழகத்துடனும் வணிக தலவுலாப் போக்குவரத்துத் தொடர்பு கொண்டிருந்த சங்குவேலித்துறை, நாகதீப தலவுலாக் காரருடையவும் மரக்கல வணிகருடையவும் தங்கிடமாகவும் விளங்கியதால், சங்குவேலித்துறைக்கு வேண்டிய நுகர்பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு பேருதவியாக இருந்தது வழுக்கையாற்றின் கதிரைமலைத்துறை.

கதிரைமலை இறங்கு துறையில் இருந்து, நேர்கோடிட்டாற் போன்று மேற்கே சங்குவேலி வரை செல்கிறது ஒரு நெடுஞ்சாலை. இந் நெடுஞ்சாலை எந்நேரமும் குதிரை வண்டிகளினதும் மாட்டு வண்டிகளதும் நெருக்கமான போக்குவரத்து உடையதாய் இருந்தது.

இறங்குதுறையில் இருந்து சங்குவேலி செல்லும் நெடுஞ்சாலையில் கதிரைமலை நகரம் அமைந்திருந்தது. அந்நாளில் வடகுடாநாட்டில் கதிரைமலை மக்கட் பெருக்கமுடையதாகவும் சைவநெறி வழுவாத பண்பாடுகளால் உயர்ந்த மக்களின் குடியிருப்பாகவும் விளங்கியது. கதிரைமலையில் இருந்து மூன்று கல் தொலைவில் இருந்த புத்தசமயச் செல்வாக்குடையதும் பன்னாட்டு மக்களின் வரவால் நாகரிக மாற்றங்களை உடையதுமான கந்தரோடை நகரின் செல்வாக்கினால், எள்ளளவும் பாதிக்கப்படாமல் இருந்தது கதிரைமலை.

கதிரைமலையூடாகச் சங்குவேலி செல்லும் சாலையில், இறங்குதுறைக்கும் கதிரைமலைக்கும் இடையில், கதிரைமலையின் கிழக்கு எல்லையில் அடர்ந்து கிடந்த காட்டின் ஓரமாக அமைந்திருந்தது கதிரைமலைச் சிவன்கோவில். கோவிலின் பின்புறம் அடர்ந்த காடாக இருந்தாலும் முன்புறம், கட்புலனைக் கடந்த தூரம் வரை, வழுக்கையாறு ஊட்டி வளர்க்கும் நன்செய்யும் புன்செய்யும் (நன்செய் - நெல்வயல். புன்செய் - சிறுகூல வயல்) செழித்துக் கிடந்து கண்களைக் குளிர்வித்தன.

நாணித்தலை குனியும் மடமையுள் ஆழ்ந்த பெண்களைப் போல அல்லாமல், அறிவுச் செருக்கால் நிமிர்ந்து நிற்கும் நெறி தவறாத மங்கையரைப் போல, இன்னும் முற்றாத நிமிர்ந்த இளங்கதிர்களையுடைய நெற்பயிர்கள் காற்றை எதிர்த்தாடிக் கொண்டிருந்தன. ஆங்காங்கே மேட்டுப் பாங்கான பகுதிகளில் பச்சைத் திடல்களாகத் தோன்றிய கதலித் தோட்டங்களும் எண்ணை குழைத்த கரும்பச்சைச் சாயம் போல் மினுங்கும் வெற்றிலைக் கால்களும், காண்பவர் கண்களில் காவியங்களைப் படைத்துக் கொண்டிருந்தன. இந்த ஓவியப் படைப்புகளுக்குப் பின்னால் ஒரு காவியம் கருக்கூட்டிக்கொண்டிருந்தது.

கதிரைமலைச் சிவன்கோவிற் பின்புறச் சுற்று வீதியில், கோவிற்சுவரை அண்டினாற்போல், அடர்ந்து மதர்த்துக் கவிந்து வளர்ந்திருந்தது ஒரு நாவல் மரம். அந்த நாவல் மரத்தடியிலே கிடந்த ஒற்றைக் கல்லிருக்கையில், நாடியில் கையூன்றியபடி சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறான் ஒரு இளைஞன். அவனுடைய முகக்குறிப்பு, ஆழ்ந்த கவலையுடன் சிந்தனையில் இருப்பதையும், அவன் அடிக்கடி நெடுஞ்சாலைப் பக்கமிருந்து கோவிலை நோக்கிவரும் நடைவழியைப் பார்ப்பதிலும் இருந்து, யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதையும் காட்டிக் கொண்டிருந்தது.

பாவலர்கள் காவியங்களில் காவியத்தலைவிகளை மட்டுமன்றி, சிவனொடு பாகமாய் அமர்ந்

துள்ள சிவகாமியையும், பெருந்தடங்கண்ணி என்று போற்றிப் புகழ்திருக்கின்றனர். ஆனால், அந்த இளைஞனுடைய கண்களில் இருந்து, புல வர்களின் கற்பனை தவறு என்று தோன்று கிறது. அந்த இளைஞனின் கண்களும் பெருந் தடங் கண்கள் தான். அவ்வகன்ற கண்களிலே கொப்பளிக்கின்ற அறிவின் பெருக்கு, ஆழ்ந்த சூழாய்வு (சிந்தனை), ஏதோ பெரிய காரியங் களைச் சாதிக்கப் போகிறவன் என்பதைக் காட்டிக் கொண்டிருந்தன.

அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி எனும் ஆண் மையின் நான்கு குணங்களும் நிரம்பியவனின் கண்களும் பெருந்தடங் கண்கள் தான். ஏனோ? புலவர்கள் இதனைக் காணத் தவறிவிட்டனர்.

யார் இவன்? முகத்திலே அரசகளை இருக்கி றது. ஆனால், முடிமன்னன் அல்ல. கருத்துப் பெருத்து உருண்ட மார்பும் வீங்கு நெஞ்சமும், கடைந்தெடுத்தாற் போன்று புடைத்த கால்களும் அவனின் இடையில் இருந்தாலும் அவன் இருக்கையில் இருப்பதால் இருக்கையில் சரிந்து கிடக்கும் உடைவாளும் அவன் ஒரு பெருவீரன் என்பதைப் பறைசாற்றின. ஆனால், அவன் போர்வீரனல்ல.

அவனுடைய கால்களில் மூவேந்தருடைய கால் களில் உள்ள வீரக்கழல்கள் இல்லை. அவனு டைய மார்பிலே மாணிக்கமாலைகள் இல்லை. கைகளிலே கடகம் காணப்படவில்லை. வட்டு டை போன்று சுருக்கிக் கட்டிய வேட்டி மட்டும் தான் அவனுடைய இடையில் இருந்தது. ( வட் டுடை- பழந்தமிழ்ப் போர்வீரர்கள் அணியும் உடை- கட்டைக் காற்சட்டை போன்றது) கோவிற் சுவரோடு தன் பிடரியை உரோஞ்சிக் கொண்டிருந்த அவனுடைய குதிரை, அடிக்கடி அவனைப் பார்ப்பதும் ஏதோ புரிந்து கொண்டது போல் மெல்லக் கனைப்பதுமாக நின்றது.

நடுப்பகலாக இருந்தாலே வெய்யில் நுழைய அஞ்சுவது போல், ஒருசில ஒளித்துளிகளே உள்ளே சிதறிக் கிடக்கும், அந்தச் சிவன் கோவில் மேற்கு வீதிக் காடும், நாவல் மரத்த டியும் பொழுது சாய்ந்துவிட்டதால், இருளத் தொடங்கிவிட்டது: அடர்ந்த மரங்களிடையே அங்கொன்றும் இங்கொன்றுமாக, நகரும் ஊர்வ னவற்றின் ஊரலால் இலைச் சருகுகள் அமை தியைக் குலைத்துக் கொண்டிருந்தன. காட்டுப் பறவைகளின் ஓசைகளும் தூரத்தே வழுக்கை யாற்றின் மீது குடிகொண்டுள்ள புள்ளினங்க ளின் அலம்பலும் ஒருவித பயவமைதியை ஏற் படுத்திக் கொண்டிருந்தன.

இந்த இளைஞனுடைய முகத்திலே கடுதி (அவசரம்) தெரிந்தது. இன்னும் ஏன்காணவில் லை என்கிற எதிர்பார்ப்பின் சாடை தெரிந்தது. கோவில் வெளிமாடத்துத் தெற்குச் சுவரிலிருந்த சிறிய சாளரம் ஊடாக, தூண்டாமணி விளக்கின் ஒளிக்கீற்று ஒன்று தெறித்துப்போய், நெடுஞ்சா லையில் இருந்து கோவிலுக்கு வரும் நடைவழி யைத் தொட்டுக் காட்டிக்கொண்டிருந்தது:

நேரமாகிவிட்டதை உணர்ந்த இளைஞன் எழுந்தான். எழுந்த வேகத்தில் அவனுடைய இடையில் இருந்த வாள் கல்லில் தட்டுண்டு டங் என்று ஓசை எழுப்பியது. அவ்வொலியைக் கேட்டுக் கலைந்த காட்டுப் பறவைகள் சலசலப்பை ஏற்படுத்தின. அவ்வேளையில், அந்நடைவழியில் விரைந்து வருகின்ற சில குதிரைகளின் காலடி ஓசைகள் கேட்டன. இளைஞன் கூர்ந்து காதைக்கொடுத்தான். குதிரைகளின் ஓட்டவேகத்திலிருந்தும் காலடி ஓசைகளின் எண்ணிக்கைகளில் இருந்தும் தன் நண்பர்கள் வருவதைப் புரிந்துகொண்டு அமைதியானான்.

தொடரும்...

# புதிய தேடல்கள்( புதிய எழுத்தாளர்களிற்கான பகுதி )

## சுகமான சொந்தங்கள் – சிறுகதை

மன்னாரிலிருந்து ச.ரேகா

லக்கேஜை சுமந்து கொண்டு விமான நிலைய த்தினுள் நுழைந்த சுமதியின் மனம் திக்...திக்... என அடித்துக்கொண்டிருந்தது. கண்களிலிரு ந்து மறையும் வரையும் விமான நிலையத்தின் வெளிவாயிலில் நின்று கொண்டிருந்த அம்மா வைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறே அவள் சென்று கொண்டிருந்தாள். புறப்படத்தயாராகும் விமானங்களைப் பற்றிய விபரங்கள் ஒலிபரப்பப் பட்டுக் கொண்டிருந்தன.

அவள் அப்படியே தனது விமான நிலைய சோதனையை முடித்துக்கொண்டு பிரான்சிற் குப் பயணமாகும் விமானத்தின் அருகே சென்று அங்கு நின்ற பயணிகள் வரிசையில் தன்னயையும் இனணத்துக்கொண்டாள்.

விமானம் ஒரு பருந்தைப்போல் விர்ரென்ற இரைச்சலுடன் மேலெழுந்து மெல்லமெல்ல உயரப்பறக்க ஆரம்பித்தது. சுமதிக்கு அது முதலாவது விமானப்பயணமாதலால் பயமும் மகிழ்ச்சியும் கலந்த ஒரு புதுமையான அனுப வமாக இருந்தது.

விமானப்பணிப்பெண்கள் பார்ப்பவர்கள் கவரும் வண்ணம் நேர்த்தியான ஆடையும் அன்பான உபசரிப்புமாக அங்குமிங்கும் சிட்டுக்குருவி யைப் போன்ற சுறுசுறுப்புடன் இயங்கிக்கொண் டிருந்தனர்.

சுமதியின் அருகிலும் ஒரு பணிப்பெண் வந்து சீட்பெல்ட்டை அணிவதற்கு அவருக்கு உதவி, அன்பாக ஒரு சில வார்த்தைகள் பேசி உபசரித்தாள். அவளின் மனம் ஒருவாறு நிதானத்திற்கு வந்ததும் தனது நாட்டையும் வீட்டையும் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியது.

சுமதி படிப்பில் கெட்டிக்காரி என்பதால் பரீட்சை யில் பல்கலைக்கழகத்திற்கு கணிதப் பிரிவில் தெரிவாகி இருந்தாள். ஆனால் விதி அவளிற்கு வெளிநாட்டுச் சம்மந்தத்தைக் கொண்டு வந்து அவளது வாழ்க்கையையே மாற்றிவிட்டது. அத ற்கு ஏற்றாற் போல் சோதிடரும் உங்கள் மகளு க்கு இந்த வருடத்திற்குள் திருமணம் செய்யா விட்டால் இன்னும் பத்து வருடங்கள் கழித்துத் தான் கலியாணப்பலன் என உறுதியாகச்சொ ல்லிவிட அம்மாவும் அப்பாவும் அவளுக்கு மாப் பிள்ளை பார்க்கும் படலத்தை ஆரம்பித்துவிட்ட னர். அந்தத்தேடுதலின் பலனாக பிரான்ஸ் மாப்பிள்ளை ராஜன். சாதகமே சுமதிக்கு நல்ல பொருத்தமாக அமைந்ததால் அவள் படிக்க வேண்டும் என்று எவ்வளவுவோ அடம்பிடித்தும் உனக்குப்பின் இன்னும் மூன்று தங்கச்சிமார் இருக்கிறாங்க என காரணம்காட்டி இக்கலியா ணத்தை இரு குடும்பத்தாரும் கலந்து பேசி முடிவு செய்தனர்.

போன வருடம் தான் சுமதியின் திருமணம் நடந்தது திருமணத்திற்காக ராஜன் பதினைந்து நாட்கள் விடுமுறையில் வந்து திருமணம் முடிந்து ஒருகிழமையில் பிரான்சிற்குப் பயண மாகி விட்டான். அதன் பிறகு தொலைபேசி யின் மூலமே இருவரும் சந்தித்துக்கொள்ள முடிந்தது. பிரான்சிற்கும் இலங்கைக்கும் நாலு மணித்தியாலங்கள் வித்தியாசம் என்பதால் அதிகமான தொலைபேசி அழைப்புக்கள் இரவி லேயே வரும் இப்படியே காலம் உருண்டோடி ஒரு வருடமும் ஆகிவிட்டது.

தனது பழைய நினைவுகளை மீட்டிப் பார்த்த அவள் பிரான்சை அடைவதற்கு இன்னும் இரண்டுமணி நேரமே இருக்கிறதென்று

நினைத்தவுடன் அவளைப்பயம் தொற்றிக் கொண்டது.

வெளிநாட்டு நடப்புக்களைப்பற்றி அவள் நல்லதும் கேட்டிருக்கிறாள், கெட்டதும் கேட்டிருக்கிறாள் என்பதால் பிரான்சை நெருங்க நெருங்க எல்லா எண்ணங்களும் விஸ்வரூபமெடுத்து அவளைப் பயமுறுத்தின. ஐயோ! ராஜ் எப்படி இருப்பாரெண்டு தெரியாதே. காயத்திரி அக்காக்கு நடந்தமாதிரி எனக்கும் நடந்து விடுமோ? அவாவுக்கு வெளிநாட்டுக்குப் போன பிறகு தானே அவவின் புருசன் ஏற்கனவே கலியாணம் ஆனவரெண்டு தெரிய வந்தது. கடவுளே, ராஜ் அப்படி இருக்கக்கூடாது. என்னை நீதான் காப்பாத்த வேண்டும். ஆனா, அம்மாவும் சும்மா இருக்கேல்ல. எத்தனை பேரிடம் சொல்லி ராஜைப்பற்றி விசாரித்தார். அதனாலே அப்படியொண்ணும் இருக்காது, என்ற நினைவுகளுடன் போராடிய அவள் பிரான்சை நெருங்கி விட்டது எல்லோரும் இன்னும் சில நிமிடங்ஙளில் தரையிறங்கப் போகிறீர்கள், என்ற அறிவித்தலைக் கேட்டதும் திடுக்கிட்டு சுய நினைவுக்கு வந்தவள் தானும் இறங்குவதற்குத் தயாரானாள்.

விமானம் வெகுலாவகாமாக மெல்ல மெல்ல தனது வேகத்தைக் குறைந்துக் கொண்டு பிரான்சு மண்ணைத்தொட்டுத் தரையிறங்கியது.

விமானத்தின் படிவழியே இறங்கிக் கொண்டிருக்கும் போதே ராஜ் வந்திருக்கிறானா எனத் தேடியவளுக்கு சிரமம் கொடுக்காமல் ராஜ் அவனது அக்கா குடும்பம், நண்பர்கள் என ஒரு பட்டாளமே அவளை வரவேற்க விமான நிலையத்திற்கு வந்திருந்தது.

சுமதிக்கு அவர்களைப் பார்த்ததும் சந்தோசமாக இருந்தது விமான நிலையத்திலிருந்து அவளை அழைத்து வந்ததும் எல்லோருமாக ஒரு வானில் ஏறி இரண்டு மணித்தியாலப் பயணத்தின் பின்னர் ராஜ் வீட்டை வந்தடைந்தனர்.

சுமதிக்கு பார்ப்பதற்குச் சிறிதாக இருந்தாலும் அழகாகவும், பளிச்சென்றும் சுத்தமாக இருந்தது. அவள் போன புதிதில் ராஜ் ஒரு மாத லீவு எடுத்துக்கொண்டு அவளுடனேயே இருந்து அவ்வீட்டில் செய்யவேண்டிய வேலைகளை ஒவ்வொன்றாய் பொறுமையுடன் கற்றுக்கொடுத்தான். அவளும் புதிதாக தொற்றிக் கொண்ட உற்சாகத்துடன் அவற்றைக் கற்றுக்கொண்டாள். ராஜ் முடிந்தவரை அவளை பிரான்சிலிருக்கும் பிரபல்யமான இடங்கள் சிலவற்றுக்குக் கூட்டிச்சென்றான். அவ்வாறு சென்ற இடங்களில் ஈபிள்டவரே அவளை வெகுவாகக் கவர்ந்தது. முன்பு தங்கள் வீட்டில் வோல்கங்கரிலும் டீ.வியிலுமே ஈபிள்டவரை பார்த்த அவளுக்கு அதை நேரில் பார்த்தது மிகுந்த சந்தோசத்தைத் தந்தது. அத்துடன் ராஜ் தான் பிரான்ஸிற்கு வந்த புதிதில் ஈபில் டவரிலிருந்த ஹோட்டல் ஒன்றிலே வேலை செய்தாகக் கூறியது. அவளுக்கு இன்னும் ஆச்சரியத்தைத் தந்தது.

இப்படியாக ராஜை அவள் நினைத்துப் பயப்பட்ட மாதிரி இல்லாமல் மிகவும் அன்பாகவும் அக்கறையுடனும் அவளைப் பார்த்துக் கொண்டான். இவ்வாறு இருக்கையில் ராஜின் விடுமுறையும் முடிந்து அவன் வேலைக்குப்போகவும் தொடங்கி விட்டான். ராஜ் வேலைக்குப் போனால் சுமதி தனியாக இருப்பாள் என்பதற்காக ராஜின் அக்கா தனது பத்து வயது மகனை அவளுக்குத்துணையாக அனுப்பி வைத்தாள். அவனுடன் சுமதிக்கு நன்றாகப்பொழுது போனது. அவன் பிரான்சிலேயே பிறந்து வளர்ந்ததால் அவன் தமிழ் கதைப்பது கேட்பதற்கு வேடிக்கையாக இருக்கும். அவனும் அடிக்கொரு முறை மாமி... மாமி... என கூப்பிட்டபடி அவளைச் சுற்றியே வருவான். அவன் மட்டுமல்ல ராஜின் அக்கா கலாவும் அவளுக்குப்

பெரிதும் உதவியாக இருந்தாள். வீட்டை ஒழுங்குபடுத்துவது, வீட்டிற்குத் தேவையான சாமான்கள் வாங்குவது, சமையல் குறிப்புகள் தருவது என பலவகையிலும் சுமதிக்கு உதவியாக இருந்தாள்.

அது மட்டுமல்லாமல் சுமதி தாய்மை அடைந்து விட்டாள். என்று தெரிந்த ராஜின் அக்கா கலா அவளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துக்கொண்டாள். அவளிற்கு விருப்பமான உணவுகளைச் சமைத்துக்கொடுப்பாள், ஆலோசனைகள் வழங்குவாள் இப்படிப் பல உதவிகளைச் செய்ததோடு நின்று விடாமல், சுமதிக்கு குழந்தை பிறந்தபோது இலங்கையிலிருந்து அவளது அம்மாவால் வரமுடியாது என்ற நிலை ஏற்பட்டதும் அதை பெரிதுபடுத்தாது கலாவே குழந்தையையும், சுமதியையும் கவனித்து அந்த நேரத்தில் செய்ய வேண்டிய எல்லா உதவிகளையும் செய்தாள்.

இப்போதெல்லாம் அவளுக்கு பிரான்சிற்கு வரும் போதிருந்த பயம் ஒரு துளியும் இல்லை. என்ன கஸ்டம் வந்தாலும் அன்பான கணவன், உறவினர் நண்பர்கள் என அவளைச்சுற்றி இருக்கும் சொந்தங்களின் துணையுடன் சமாளித்து விடலாம் என்ற துணிவு பிறந்தது. இதைவிட வேறு என்ன வேண்டும்? அவள் தனது சுகமான சொந்தங்களுடன் இன்பமாக வாழ்ந்து வருகிறாள்.

# என் இனிய தமிழ்மக்களே!

நோர்வேயிலிருந்து ஆரோக்கியராணி

நான் நோர்வே நாட்டில் மருத்துவராக வேலை செய்கிறேன். நான் அனுபவப்பட்டதில் ஒரு சின்ன வியத்தை உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். என்ன வென்றால் தமிழர்களாகிய நாம் சமைத்து சாப்பிடுவதில் ஆர்வம் உடையவர்கள். மிக்க நன்று. ஆனால் நமது சாப்பாட்டு மணம் நமது உடைகளில் மணக்கும் போது அருகில் இருக்கும் ஐரோப்பிய மக்களுக்கு கஷ்டமாக இருக்கலாம். நாம் நினைக்கலாம் சாப்பாட்டு மணம் தானே என்று. நமது நாட்டில் அதாவது இந்தியா இலங்கையில் திறந்த வெளியாக இருப்பதால் சாப்பாட்டு மணம் உடையில் மணப்பது அரிது, நீங்கள் கடைகளுக்குப் போகும் போது, பேருந்தில் அமரும் போது கவனித்திருக்கலாம். நம்மை விட்டு ஐரோப்பியர்கள் விலகிப் போவதை, அதே போல் முக்கியமாக மருந்துவரிடமோ, மருத்துவமனைக்கோ செல்லும் போது தயவு செய்து உடுப்புகளில் சாப்பாட்டு மணம் இல்லாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள். உங்களைப் பார்க்கும் மருத்துவருக்கே சில வேளை கஷ்டமாக இருக்கலாம். அதனால் கூட உங்களுடன் ஒழுங்காக கதைத்து சரியான மருந்தை வழங்க முடியாமல் இருக்கலாம். அதற்காக அடுத்த முறை கமகம வென்று வாசனைத் திறவியங்களை அடித்துக் கொண்டு செல்ல வேண்டாம். நமது உணவு நல்லது. மணமும் நல்லது. ஆனால் உடுப்புகளில் மணக்காதபடி பார்த்துக் கொள்ளுங்கள் நன்மை உண்டு.

# சிறுவர் வளர்ப்பில் சிறப்பான வழிமுறைகள் புலம்பெயர் சிறுவர்களைப் புத்திசாலிகளாக வளர்ப்போமா?

நகுலா சிவநாதன்

எங்கே? எமது வருங்காலச் சிறுவர்களை அறிவும் புத்திசாலித்தனமும் உள்ள பிள்ளை களாக வளர்ப்போமா? அன்னிய மண்ணிலே அகலக்கால்பதித்து வளரும் நாம், எமது பிள் ளைகளை நல்லறிவும், திறமையும் உடையவர் கள் ஆக்க வேண்டும் அல்லவா? அதற்கு பெற் றோராகிய நாம்தான் ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டும்.

மண்ணிலே வரும்போது மழலைகள் மகத்தான வர்கள்தான் திறமை உடைய சிறுவர்கள் தான். அவர்களின் நல்லாற்றலை, நல்ல சிந்தனை வளத்தை நாம் தொடர்ந்தும் வளர்க்க வேண் டும். சிறுபிள்ளைகள் தங்கள் சிந்தனை வளர ஆக்கபூர்வமான பல வினாக்களைத் தொடுத்து விடையைக் காண முயல்வார்கள். இதை நாம் தட்டிக் கழித்துவிடல் ஆகாது. விடையைச் சரி யாகவும், நேர்மையாகவும், பொறுமையாகவும் கூறுங்கள். காரணம் உங்கள் பதிலை, அல்லது நீங்கள் பதிலைக் காணும் முறையை அவர்கள் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருப்பார் கள், பின்னர் தம் சிந்தனையுடன் தொடர்பு படுத்தி சரியாயின் ஏற்றுக்கொள்வார்கள்.

வெறும் சமாளிப்புக்காக பிழையான விடைக ளைத் தெரிவு செய்யாதீர்கள், விடையை முயன் று பார்த்து தக்க விடையாயின் பகருங்கள். பிழையான விடையால் தவறான வழிக்குச் சிறு வர்களைத் திருப்புகிறோம் என்பதையும் எண் ணுங்கள்.

பல நல்ல விடயங்களைச் சிறுவருடன் பகிர்ந்து கொள்ளுங்கள். சுயமாகச் சிந்திக்கும் ஆற்ற லை வளருங்கள். இதனால் நல்லதும், வல்லதுமான விடயங்களை அவர்கள் கதைப் பதைக் காண்பீர்கள். சில செயல்களைத் தாமே செய்யவிடுங்கள். அதன் பயன், நன்மை தீமை களைத் திறமையாக ஆராய்ந்து உணர்வதைப் பாருங்கள். கஸ்ரப்பட்டால் அந்த நேரம் உதவிக்கரம் நீட்டுங்கள். வெட்டியும், ஒட்டியும் செய்வதைப் பார்த்து மகிழுங்கள். இதனால் தீமை என ஒரு போதும் எண்ணாதீர்கள். இத னால் சிறுவர்களின் சிந்தனை, கண்டுபிடிப்பு வளர்கின்றது, என மனதால் நினையுங்கள். நம் பிக்கையை நெஞ்சில் வளருங்கள். தன்னம்பிக் கை தானாக வளரும். மிதியுந்தைப் பிடித்து ஓடப்பழக்குங்கள். பழகும்போது மெல்ல மெல்ல கையை விடுங்கள். வடிவாக ஓட்டுகிறாய் என நம்பிக்கையுடன் கூறுங்கள். இந்த தன்னம்பிக் கையால் மிதியுந்தை பயமின்றி ஓடப்பழகுவதை க் காண்பீர்கள்.

வெளிச்சூழலுடன் பழக விடுங்கள். இதனால் சூழலிலுள்ள மரங்கள், மிருகங்கள், பறவைகள் போன்றவற்றைக் காணும் போது பலவித வினாக்கள், நல்ல எண்ணங்கள் மனதிலே தோன்ற வழிவகுக்கும். பலவித ஆராய்ச்சிகள் சிறுவர் மனதின் உருவாகும். நல்ல எண்ணங் கள் சிறகடிக்கும். இதனால் நல்லறிவு வளரும். நல்ல சிந்தனை வளரும். புத்திசாலித்தனமும், கெட்டிக்காரத்தனமும் நிறைந்த சிறுவர்களாக வளர்வார்கள். எனவே பெற்றோர்களே! எமது சிறுவர்களைப் புத்திசாலிகளாக வளர்ப்போமா?

# கட்டிளமைப்பருவத்தில் ஏற்படும் மாற்றமும், தடுமாற்றமும்

அருட்சகோதரி செல்வி சீமான்

மனித வாழ்விற்கு வரைவிலக்கணம் கூறமுடியாது. இது பல இன்னல்கள், சவால்கள் நிறைந்தவொன்றாக காணப்படுகின்றது. இரவும் பகலும் போல இன்பமும், துன்பமும் நிறைந்ததே வாழ்க்கை. இந்தப் பூமியிலே உள்ள ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் ஒருவருக்கொருவர் முற்றிலும் மாறுப்பட்டது. இயந்திரமாக சுழலுகின்ற இக்கால மனிதனிலே பலவிதமான வேறுபாடுகள்,மாற்றங்களை காணமுடிகின்றது. சிறுகுழந்தைகள் முதல் முதுமைப்பருவம் வரை அதாவது கருவறை முதல் கல்லறைவரை மனிதனிலே ஏராளமான மாற்றங்கள் நிகழ்கின்றன. இந்த மாற்றங்கள் எல்லாம் எம்மை ஏதோ ஒருவழிக்கு இட்டுச்செல்லுகின்றன. சில மாற்றங்கள் நல்லவற்றை நோக்கியும், சில தீயவற்றை நோக்கியும் மனிதனை இட்டுச்செல்வதை கண்கூடாகக் காண்கின்றோம். சாதாரண ஒரு மனிதனின் வாழ்வை எடுத்துக் கொண்டால் தாயின் கருவறையை (வயிற்றை) விட்டு வெளியே வந்தநாள் முதல் அவனது இறப்புவரையும் தினமும் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. இம் மாற்றங்கள் உடல், உள ஆன்மீக மாற்றங்களாகவும், வேறு பல மாற்றங்களாகவும் அமையலாம். இவ்வாறு சிறுபராயம் முதல் பல மாற்றங்கள் ஊடாக வளரும் குழந்தை கட்டிளமைப்பருவத்தை எட்டிப்பிடித்து விடுகின்றது. இங்கேதான் அவனுடைய வாழ்க்கையில் அனேக மாற்றங்களை அவதானிக்க முடிகின்றன.

கட்டிளமைப்பருவம் என்பது ஏனைய பருவங்களைவிட முக்கியமான பருவம் பதினெட்டு வயது வரையான வயதெல்லை இதில் அடங்கும். இப்பருவத்தில் உடல், உள குணாதிசயங்களில் ஏராளமான மாற்றங்கள் நிகழும், இப்பருவத்தின் ஆரம்பத்தில் உடல் வளர்ச்சி அதிகமாகப் காணப்படும். பதினொன்று முதல் பதினைந்து வயது வரையான காலப்பகுதி கட்டிளமைப்பருவத்தின் முன்பகுதி, பூப்படையும் பருவம் எனப்படும்.

கட்டிளமைப்பருவம் ஆளுக்காள் வேறுபடும் பெண்கள் 12 அல்லது 13 வயதிலே பூப்படைவர். ஆண்கள் பெரும்பாலும் 15 வயதிலே பூப்படைதல் 2அல்லது 3 ஆண்டுகள் வேறுபடலாம். இப்பருவத்திலே இருபாலாரும் உச்சமான உடலியல் மாற்றங்களைப் பெறுகின்றனர். இப்பருவத்திலே ஏற்படுகின்ற விரைவான வளர்ச்சி மனித வளர்ச்சியில் ஏற்படுகின்ற முக்கியமான மாற்றமாகும். உடல் வளர்ச்சி தீவிரம் அடையும், இப்பருவத்தில் பெண்களில் வளர்ச்சிவேகம் 9-12 வயதுக்கிடையில் உச்ச நிலை அடைந்து பின்னர் மந்த நிலையில் நிகழ்கின்றது. ஆண்களின் தீவிரவளர்ச்சி 12-13 வயதிலே ஆரம்பமாகின்றது. கட்டிளமைப்பருவம் மனவெழுச்சி உறுதியற்ற பருவம் இப்பருவத்தில் அடிக்கடி சமநிலையற்ற மனவெழுச்சிகளுக்கு ஆளாகின்றனர். பெரும்பாலான மனவெழுச்சிகளுக்கும், மனச்சிக்கல் களுக்கும் காரணம் இவர்களது உடல் அங்கங்கள் நல்ல சடுதியான மாற்றம் அடைவதாகும். உடல் அமைப்பின் துரிதவளர்ச்சியினை இவர்கள் ஏனைய இளைஞர் யுவதிகளோடு தங்களை ஒப்பிட்டு நோக்கி தாழ்வுச்சிக்கல்களுக்கு ஆளாகின்றனர்.

இப்பருவத்தில் உள்ளவர்கள் எப்போதும் தனித்து இயங்கவும், எதிர்ப்பாலாருடன் நெருங்கிப்

பழகவும், அவர்களுடைய பாராட்டுக்களையும் புகழ்ச்சியையும், தமதாக்கிக்கொள்ளவும் விரும் புவர். அத்தோடு தமக்குப்புகழ் தரக்கூடிய எந்த வேலையோ, காரியமோ, தொழிலோ எதுவென் றாலும் அதில் தீவிரமாக ஈடுபடுவர். பெற்றோர், பெரியோர் தம்மை கட்டுப்படுத்துவதை விரும்ப மாட்டார்கள். தமது சொந்த உணர்வுகள், விருப்பு வெறுப்புகளுக்குத் தாமே உரித்துடை யோர் என்று கருதுவர். கட்டுப்பாடுகள் இவர் களுக்கு மிகவும் கசப்பாக இருக்கும். தாம் விரும்பியவாறு உடுத்தவும், உண்ணவும், செய ற்படவும் விரும்புவர். இப்பருவத்தில் ஏனைய பிள்ளைகளைப் போல தாமும் எல்லாவிதத் திலும் சமநிலையில் இல்லாதவிடத்து மிகவும் தாழ்வுச் சிக்கலுக்கு ஆழாகின்றனர். உதாரண மாக நல்ல விலையுயர்ந்த ஆடைகள் அணிய வசதியில்லாத போது வெளியிடங்களுக்குச் செல்ல விரும்பமாட்டர்கள். இவர்களில் பெரும் பாலானோர் தமது நேரத்தை நண்பர்களுடன் சேர்ந்து அரட்டை அடிப்பதிலும், சந்திகளிலும், தெருக்களிலும் நின்று தேவையற்ற பகிடி வதைகளில் ஈடுபடுவதிலும், இன்னும் சினிமா, குடிபோதையிலும் செலவிடுகின்றனர். பெரும் பாலும் இப்பருவத்தில் இவர்கள் உறுதியற்றவர் களாக, விளையாட்டுப் பிள்ளைகளாக, இலட்சி யமற்றவர்களாக காணப்படுகின்றனர். பள்ளிப்ப ருவத்திலே துள்ளித்திரிந்து ஆர்வமுடன் கல்வி பயின்று தேறுவதற்குப் பதில், பாதாளத்தில் விழும்படியான பாதகச்செயல்களில் ஈடுபடுகி ன்றனர். எதிர்பாலாரின் கவர்ச்சியும், இதற்கு முக்கியகாரணங்களில் ஒன்று அநேகமான மாணவர்களிடத்தில் கட்டிளமைப்பருவம் பெரு ம் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இப்பருவத்தி லே நீர்க்குமிழி போன்று தோன்றி மறையும் சிறுசிறு ஆசைகளுக்கும், கவர்ச்சிகளுக்கும், பொழுதுபோக்குகளுக்கும் இடம் கொடுப்பதனா ல் சிறந்த முறையில் தமது கல்வியைத்தொடர முடியாமல் கஸ்ரப்படுகின்றனர். இப்பருவமாற் றங்களை மட்டுமல்ல தடுமாற்றங்களும் ஏற்படு கின்றன. உறுதியான முடிவுகளை எடுக்க முடியாமல் தடுமாறுகின்ற ஒரு காலமாகவும், இப்பருவகாலம் அமைகின்றது. எடுத்துக்காட் டாக ஓரு சிறிய கதையைக் கூறலாம். ஏடிசன் என்பவன் வறுமையான ஒரு குடும்பத்தில் பிறந்த ஆறு பெண் சகோதரிகளுக்கு, ஒரே ஆணாகவும் வளர்ந்தான். நான்காவது குழந் தையான இவன் மாநிறம் கொண்ட அழகான தோற்றமுடையவன். விளையாட்டுவீரன், சுறு சுறுப்புமிக்கவன், இவன் தரம் பத்திற் கல்வி கற்றபோது பெற்றோர் இவனைப்பாடசாலை விடுதியில் சேர்த்தனர். வீட்டில் கல்விகற்க வசதிகள் இருக்கவில்லை. நாட்டுநிலைமையும் அதற்கு இடம் தரவில்லை. பாடசாலையில் கல்வி கற்ற வேளை அங்கே வேலை பார்க்கும் லக்சிக்கா அக்காவுக்கும் எடிசனுக்கும் இடை யே சிறிய தொடர்பு ஏற்பட்டுள்ளது. இத்தொடர்பு அவனது உயர்தரப் பரீட்சை வரை தொடர்ந்தது. இருவருக்குமிடையே உள்ள தொடர்பு வலுப் பெற்று வரும் வேளையில் பரீட்சையை முடி த்துக்கொண்டு லக்சிக்கா அக்காவின் தொடர் பை சாதுரியமாகத் துண்டித்துவிடலாம், என அவன் நினைத்தான். ஏனெனில் பதினெட்டு வயதான அவனுக்கு எல்லாமே விளையாட்டாக அமைந்திருந்தது. ஆனால் பரீட்சை முடியும் வரைகாத்திருந்த லக்சிக்கா அவனை அணுகி முடிவைக் கேட்டபோது அவனது பேச்சில் மாற்றம் காணப்பட்டது. அது அவளுக்கு அதிர் ச்சியைக் கொடுத்தது. அவள் விடாப்பிடியாகத் தன்னை மணக்கும்படி வேண்டிக்கொண்டதால் இருவருக்கும் திருமணம் நிறைவேறியது. நிரந் தர வேலையற்ற எடிசன் தனது குடும்ப வாழ்வை கொண்டு நடத்த முடியாமல் திண்டா டினான் துள்ளித்திரிந்து சந்தோசமாக வாழ்க் கையை அனுபவிக்கவேண்டிய வயதில் அவ னது கால்களுக்குக் கட்டுப்போடப்பட்டது. தீர்மானங்களை எடுக்க முடியாது கட்டிளமைப் பருவத்தில் தடுமாற்றங்களும், சஞ்சலமுடைய தளர்ந்த மனப்போக்கும் அவனுடைய

வாழ்க்கையைப் பாழாக்கிச் சந்தோசத்தை இழக்கச்செய்தது. இப்பருவத்தில் உள்ள இந்த வயதினருக்கு சமுதாயத்தில், குடும்பங்களில், பாடசாலைகளில் வழிகாட்டிகளாக அமையும் ஆசிரியர்களும், பெற்றோர்களும், அன்பான வழிகளில் அவர்களை அணுகி அவர்களுக்கு உதவிகளைச் செய்து கொடுத்தால் அவர்களிடத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்துதல் சாத்தியமாகலாம். இப்பருவம் தடுமாறவைக்கும் பருவமாகும். எனவே ஆசிரியர்களாகிய நாம் அவர்களை நல்ல பாதையில் செல்ல வழிகாட்டுதல் அவசியமாகும். வழிகாட்டிகள் நற்குண, நன்னடத்தை உடையோராய் மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டுவாழ்தல் இப்பருவ வயதினருக்கு உதவும் உயர்ந்த செயற்பாடாகும்.

# மதத்தினுள் மறைந்திருக்கும் உண்மைகளும் மறைக்கப்பட்டிருக்கும் உண்மைகளும்

**இரா.இரத்தினகுமார்**

இலக்கிய வரலாற்றாசிரியர்கள் தமிழக வரலாற்றை சங்ககாலம், சங்கமருவியகாலம், பல்லவர்காலம், சோழர்காலம், விஜயநாயக்கர்காலம், ஐரோப்பியர்காலம், இருபதாம் நூற்றாண்டு என வகுத்துள்ளனர். கி.பி 3 முதல் கி.பி 6 வரை சங்கமருவியகாலம் இக்காலப்பகுதியில் சமண மதம் தமிழகத்தில் மேன்மையுற்றிருந்தது. இக்காலப்பகுதியில் வாழ்ந்த புனிதவதி என்ற காரைக்காலம்மையார் பதிகம் பாடும் முறையை தொடக்கி வைத்தார். தொடர்ந்து வந்த பல்லவர் காலத்தில் நாயன்மார்களால் ஏராளமான பதிகங்கள் பாடப்பட்டன. நாயன்மார்களின் சமயப்பணிகளால் சைவம் மேன்மையுற்று சமணம் வீழ்ச்சியுற்றிருந்தது. சம்பந்தர், தான் வாழ்ந்த காலப் பகுதி அரசனான கூன்பாண்டியனை அரசி மங்கயர்கரசியின் துணையுடன் மதம் மாற்றி நின்றசீர்நெடுமாறனாக்கினார். சம்பந்தர் அரசியின்பால் கொண்ட அன்பால் 'மங்கயர்கரசி வளர்வன் கோன்பாவை' எனப்பாடினார். அக்கால அரசு ஆசியுடன் பல்லாயிரக்கணக்கான சமணத்துறவிகள் கழுவேற்றிக் கொல்லப்பட்டனர். சம்பந்தர் தன் பதிகங்களிலே பௌத்த, சமண மதங்களை தூற்றிப்பாடுவதைக் காணலாம். சமணமதவீழ்ச்சிக்கு முக்கிய காரணகர்த்தாவாக விளங்கினார். சம்பந்தருக்கு அகவை பதினாறு. பெரியவர்களால் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. திருமணம் கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. பழிதீர்க்கத் தருணம் பார்த்துக் கொண்டிருந்த சமணர் திருமண வீடு என்றும் பாராமல் வைத்ததீயில், அனைவரும் தீயில் கருகிமாண்டனர். பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழாரால் நாயன்மார்களின் வரலாறு எழுதப்பட்டது. சம்பந்தருடைய பதிகங்களில் காணப்படும் தகவல்களின் அடிப்படையிலும், அவர் வாழ்ந்த, சென்று தரிசித்த இடங்களுக்குச் சென்று சேகரித்த தகவல்களின் அடிப்படையிலும் சம்பந்தர் வரலாறு திரித்து எழுதப்பட்டது. சமணரின் தீயில் கருகிய குழாத்தை சம்பந்தரின் திருமணத்தில் தோன்றிய சோதிப்பிழம்பில் கலந்ததாக கதை விடப்பட்டிருந்தது.

தொடரும்...

# வெளிநாட்டு வியாபாரமும் கலாசார சீர்கேடும்

மன்னாரிலிருந்து காசினி

இலங்கை சுதந்திரம் பெற்றதை அடுத்து நாட்டினை ஆட்சி செய்த ஆட்சியாளர் சுய தேவைப்பூர்த்தியை அடிப்படையாக கொண்ட பொருளாதார அடிப்படையில் நாட்டின் அபிவி ருத்தியை முன்னெடுத்து செல்ல முயற்சி செய்தனர்.

1977ம் ஆண்டு தொடக்கம் புதிய அரசாங்க மானது இலங்கையின் பொருளாதாரத்தைத் திறந்த பொருளாதார கொள்கையாக மாற்றியது. இதன் மூலம் இலங்கையின் வர்த்தகமானது வெளிநாட்டு வர்த்தகத்துடன் நெருங்கிய தொடர் புடையதாக மாறத் தொடங்கியது. இதனால் இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் ஏற்படத்தொங்கின.

பொருளாதாரக் கொள்கை மாற்றத்தின் பின்னர் இலங்கையில் பல வர்த்தக கம்பனிகள், தொழி ற்சாலைகள், வர்த்தக முயற்சிகள் என்பன வெளிநாட்டு கம்பனிகளின் முதலீட்டுடன் ஆரம் பிக்கப்பட்டன. இதனால் வெளிநாட்டு தொழினு ட்பம் வெளிநாட்டு முதலீடுகள், வெளிநாட்டு உற்பத்திப் பொருட்கள் என்பன இலங்கைக் குள் வர ஆரம்பித்தன. இம்முயற்சிகளினால் எமது நாட்டின் இளைஞர், யுவதிகள் பெருமளவு வேலைவாய்ப்பைப் பெற்றனர். வெளிநாட்டு உற் பத்திகள் எமது மக்களின் பாவனைக்கு வந்தன. எமது நாட்டுப் பொருட்கள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகின.

வெளிநாட்டுப் பொருட்களின் பாவனையால் மக் களுக்கு வெளிநாட்டு மோகம் ஏற்படத் தொடங் கியது. எமது நாட்டு மக்களின் நடை, உடை, பாவனை, பழக்கவழக்கங்கள் என்பவற்றில் வெளிநாட்டினரை பின்பற்றத் தொடங்கினர். இதனால் எமது நாட்டின் தேசிய உடைகள், கலாசாரங்கள், பாரம்பரியங்கள் வலுவிழந்து கொண்டு வருகின்றன.

உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் உடைகள் என்பவற்றில் கூட எமது நாட்டினர் வெளி நாட்டினரைப் பின்பற்றத் தொடங்கினர். குறிப்பா க எமது நாட்டின் இளைஞர், யுவதிகள் மேற்கத் தேய நாகரீகப் பாணியில் ஆடை அணிவதனை நாம் காணக்கூடியதாக உள்ளது. இதனைவிட வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் ஆடைகள் மற்றும் பாவனைப் பொருட்கள் உப யோகிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இதனா ல் எமது தேசிய கலாசார உடைகள் அணிவது அருகிப் போயுள்ளதுடன் உள்ளூர் உற்பத்தி களுக்கான சந்தை வாய்ப்புகளையும் குறைத்து ள்ளது.

இதனைவிட மேற்கத்தேய பாணியிலான மற்றும் பக்கற்றில் அடைத்த உணவுகளை உட்கொள்ளும் பழக்கமும் அண்மைக்காலமாக எமது மக்களிடம் உள்ளது இதனால் எமது பாரம்பரிய உணவு முறைகள் மாற்றமடைந்து வருகின்றன.

வெளிநாட்டு வர்த்தகத்தினால் வெளிநாட்டு வாழ்க்கை முறையையும் பின்பற்றுவதற்கு மக்க ள் விரும்புகின்றனர். இதனால் எமது கலாச்சா ரம் பாரம்பரியம் என்பவற்றில் மாற்றம் ஏற்பட்டு வருகின்றன. வெளிநாட்டு முதலீட்டினை பெறும் இன்னொரு முயற்சியான உல்லாசப் பயணக் கைத்தொழிலானது முக்கியமான கலாசார

சீர்கேட்டினை உருவாக்கும் காரணியாக உள்ளது. இக்கைத்தொழில் மூலம் வெளிநாட்டு உல்லாச பயணிகளைக்கவரும் வகையில் எமது நாட்டின் கலாசார மையங்கள், வர்த்தக நிலையங்கள், புராதன ஸ்தலங்கள் என்பன மாற்றப்பட்டு உள்ளன. மேலும் உல்லாசப் பயணிகளைக் கவர்வதற்காக சிறுவர்கள், பெண்கள் பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு உட்படுத்தும் செயற்பாடும் இதனாலேயே நடைபெறுவதாக கூறப்படுகிறது.

மேலும் வெளிநாட்டில் இருந்து இறக்குமதியாகும் பொருட்களை விளம்பரப்படுத்தும் ஊடகங்களும் எமது நாட்டின் கலாசாரத்திற்கு மாறான விதத்தில் பொருட்களைக் கவர்ச்சியான முறையில் விளம்பரப்படுத்துகின்றன. உதாரணமாக வாசனைப் பொருட்களின் விளம்பரங்களைக் கூறலாம். இதன் காரணமாக எமது கலாசாரத்திற்கு பாதிப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாதுள்ளது.

எனவே வெளிநாட்டு வியாபாரத்தினை எமது கலாசாரத்திற்குப் பங்கம் ஏற்படாதவகையில் மேம்படுத்துவதன் மூலம் நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுப்பது எல்லோரினதும் விருப்பமாகும்.

## உங்களுக்குத் தெரியுமா?

அண்டாட்டிக்கா என்பது என்ன?

இது தென் துருவத்தைச் சூழ்ந்துள்ள பூகண்டம். இதன் பரப்பு ஏறக்குறைய 5.000.000 சதுர மைல். இது ஆஸ்திரேலியாவிலும் பார்க்க 20 சதவீதம் பெரியது. இதன் பெரும் பகுதி 1500 அடி அல்லது அதிக கனமுள்ள உறைபனிப் படலத்தால் மூடப்பட்டுள்ளது. இதன் உட்பகுதியின் சில இடங்கள் கண்டு அறியப்பட்டுள்ளன. இங்கு உயரமான மலைத்தொடர்கள் உண்டு. உலகில் மிகப்பெரிய நிலக்கரி வயல்கள் இங்கிருக்கலாமென்று கருதப்படுகின்றது.

## டெமோ கிரிட்டஸ்

கிரேக்கரான இவர் அக்காலத்திலேயே, ஓர் பொருள் மிகச் சிறிய, கண்ணுக்குத் தெரியாத அணுவாக கட்டமைத்து உள்ளதென்று கணித்து தெரிவித்தவராவர்!

## வாழ வழி விடுவோம் (குழந்தைப்பாடல்)

எல்லோர்க் குள்ளும் மறைவாக
ஏதோ திறமை இருக்கிறது!
துல்லிய மாக ஆராய்ந்து
தொடர்ந்து வளர்ந்தால் உயர்ந்திடலாம்!!

விரிந்து கிடக்கும் வாய்ப்புகளுள்
விவேக மாக ஆராய்ந்து
தெரிந்தே எடுப்போம் ஒருதுறையைத்
தினமும் அதைநாம் பயின்றிடுவோம்!

நாட்டம் கொண்ட துறைதனிலே
நாங்கள் காலைப் பதித்திடுவோம்
வீட்டி லிருந்தே அதைவளர்க்க
வேண்டும் முயற்சிகள் செய்திடுவோம்!!

ஏற்றத் தாழ்வு பார்க்காமல்
ஏழ்மை செல்வம் நோக்காமல்
ஆற்றல் கண்டு போற்றிடுவோம்!!
அடுத்தவர் வாழ வழிவிடுவோம்!!

சபா.அருள் சுப்பிரமணியம்

## நம்ம ஊரு நல்ல ஊரு

# வேலணை

செல்வி. வீ. தமிழினி

வேலணை சப்த தீவுகளில் ஒன்றான லைடன் தீவின் கிராமங்கள் பத்தில் ஒன்றாகும். கிழக்கு மண்கும்பானையும், மேற்கு சரவணை புளியங் கடல் கருவிலையும், வடக்கும் தெற்கும் எல் லையாகவுடையது இக்கிராமம் எனினும், வடக் கில் ஊர்காவற்றை, யாழ்ப்பாணம் வீதிக்குட் பட்ட தென்பகுதிக்குள்ளே மக்கள் வாழ்கின்ற னர். இப்பத்தில் மண்டைதீவு கடலால் சூழப் பட்ட ஒரு தனி நிலமாகும். வீதிக்கு வடபுறம் பரந்த வெளியாய் மேய்ச்சல் தரையாக உள் ளது. வேலணை கிராமாட்சி மன்றம் பிரிவதற்கு முன்னர் இது ஒரு சிறு கிராமாகவே இருந்தது.

1952இல் இவ்விரு கிராமாட்சி மன்றங்களின் எல்லைகள் வகுப்பட்ட பொழுது சோளாவத் தை, பள்ளப்புலம் ஆகிய சரவணை கிழக்கும், புளியங்கூடல், சுருவில், ஆகிய கிராமங்களின் கிழக்குப் பகுதியும் வேலணையுடன் சேர்க்கப் பட்டன. வேலன் என்ற பிரதானியின் அதிகாரத் திற்கு உட்பட்டிருந்தமையால் வேலணை என்ற பெயர் உண்டாயிற்று என்று கூறுவர். முருகப் பெருமானின் கைவேல் வந்து அணைந்த இட மாகையால் வேலணையாயிற்று என்று வேறும் சிலர் சொல்வர். ஒல்லாந்தர் ஊர்காவற்றுறை யைக் கைப்பற்றிய பின்னர் தமதாட்சியை நிலைநிறுத்த வேண்டி வங்களாவடிச் சந்தி யிலிருந்து கால்மைல் தொலைவில் ஒரு கோபு ரத்தைக் கட்டிக் கடல்வழியாக வரும் அந்நிய ரின் வருகையைக் கண்காணித்து வந்தனர். இக்கோபுரத்தின் சிதைவினை இன்றுங் காண லாம்.

இலங்கையில் மிக நீளமானது புங்குடுதீவு வேலணைப்பால இணைப்புக்கு முன்னரும் புங்குதீவு, நயினாதீவு, நெடுதீவு மக்கள் யாழ் ப்பாணம் செல்வதற்கு வேணையைப் பிரதான இறங்கு துறையாகப் பயன்படுத்தினர். ஆங்கி லேயர் ஆட்சியில் சுமார் 1900ஆண்டளவில் அராலியைச் சேர்ந்த முத்தையா என்பவர் தீவுப் பகுதி மணியகாராக (DRO/AGA) நியமிக்கப் பட்டிருந்தார். இவர் அராலியிலிருந்து வந்து வேலணையில் தங்கி அலுவல்களைக் கவனித் தார். இவரது அலுவலகம் வேலணையில் இரு ந்தது. ஆங்கில துரைத்தனத்தார் வந்து தங்கிச் செல்வதற்கென வாடிவீடும் இங்கு அமைக்கப் பட்டிருந்தது. இதனால் வேலணை முக்கிய இடத்தைப் பெறலாயிற்று.

முத்தையாவைத் தொடர்ந்து அவரது மகன் சோமசுந்தரம் மணியக்காரரானார். இவர் வேல ணையில் நிரந்தரமாகக் குடியேறினார். மற்றும் சேர்.வை.துரைசாமி மருதையினர் சட்டம்பி ஆகியோரும் வேலணையின் வளர்ச்சியில் கண்ணுங்கருத்துமாயினர். இவர்கள் போன்ற வர்களால் ஏனைய தீவுகளைவிட வேலணை அதிக வளர்ச்சியை அடைந்தது. 1945இல் அரசாங்கத்தால் மகாவித்தியாலயம் ஒன்று வேலணையில் கட்டப்பட்டது. அதேபோலத் தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயமும் வேலணையிலேயே அமைக்கப் பட்டது. கல்வி வட்டாரம் இரு பிரிவாக்கப்பட்ட பொழுதும் ஊர்காவற்றுறைக் கல்வி வட்டார மென பெயரிடப்பட்டுள்ளது. இத்தகைய வாய்ப்பு க்களால் வேலணை மேலோங்க வசதியாக இருந்தது.

அக்காலத்தில் புத்திரங்கொண்டார் உடையா ராக இருந்தார். இவர் பெருங்குளத்தின் கீழ்க்

கரையில் மாதன் என்பவருடைய காணியில் ஓர் அம்மன் ஆலயத்தை உருவாக்கினர். இவரின் பின் உடையாரக வந்த இவரது மகன் இராம லிங்க உடையார் காலத்தில் இவ்வாலயம் வளர்ச்சி அடைந்ததென்பர். ஆனால் இவ்விடத் தில் சிறுகொட்டி புங்குடுதீவைச் சேர்ந்த கதிர் காமு என்ற துறவியாரின் கனவில் அம்மன் தோன்றித் தனக்கு ஆலயம் அமைக்கும்படி கேட்டதால், எழுந்த அம்மன் கோயிலென்ற பெயருடன் பிரகாசித்து விளங்குகின்ற தென்று வேறு சிலரும் கூறுகின்றனர். இக்கோயிலின் அயலில் செல்லப்பா சுவாமியார் நால்வர் மடம் ஒன்றினை அமைத்துச் சைவத்தை வளர்ந்து வந்தார். குறும்புப்பிட்டி என்ற இடத்தில் புத்த கோயில் ஒன்று இருந்து அழிந்துள்ளதாகச் சொல்வர். ஆனால் அங்கே இப்பொழுது இந்த இடத்தில் ஒரு வைரவர் ஆலயம் அமைக்கப் பட்டுள்ளது.

இக்கிராமத்தின் தென்கிழக்கில் வெள்ளைக் கடற்கரை என்ற இடம் உண்டு. இவ்விடத்தின் அயலில் உள்ள சாட்டியில் போர்த்துக்கேயர் 16-ம் நூற்றாண்டின் ஒரு கோட்டையக் கட்டி னர். இதில் மாதா சிலை வைத்து வழிபடப் பட்டது. பின்னர் கண்ணாடிச்சாமியார் என அறியப்பட்ட பேதுருகே பெற்றங்கோர் என்பவரா ல் சிறுகோயில் கட்டப்பட்டது. ஒல்லாந்தர் கோட் டையைக் கைப்பற்றியபொழுது மாதா சிலை யைக் கிணற்றுக்குள் போட்டுவிட்டுச்சென்றனர். பின்னர் 200 ஆண்டுகளக்கு முன் அழிந்து போன கோட்டையின் முன் சிறிய கோயிலொ ன்றைக் கட்டினர். 1789இல் வளர்ச்சியடைந்த இக்கோயில் 1850இல் தீக்கிரையாயிற்று. 1928 இல் அந்தோனி குரவரின் முயற்ச்சியால் இன் றைய சிந்தாத்திரை மாதா கோயில் கட்டப்பட் டது. இது இன்று கத்தோலிக்க சமயத்தவரின் வணக்கத்தலமாக உள்ளது.

சாட்டி கோயிலுக்குக் கிழக்கில் இரு முஸ்லிம் பள்ளிவாசல்கள் இருந்தன. ஒரு முஸ்லிம் பாட சாலையும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மிகச்சிறிய அளவில் முஸ்லிம் மக்கள் இப்பள்ளிகளுக்கு யாத்திரை செய்து தொழுகை நடத்தினர். வெள் ளைக் கடற்கரையில் இருந்த அம்மன் ஆலயம் போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்டது. அம்மன் சிலையைச் சைவர்கள் எடுத்துச் சென்றனர். அந்தச் சிலைதான் நாரந்தனை தான்தோன்றி அம்மன் அல்லது பெருங்குளம் முத்துமாரி அம் மன் என ஊகிக்கக்கூடியதாக இருக்கின்றது. கோயில் இடிந்த இடத்தில் போர்த்துக்கேயர் கோட்டையைக் கட்டினர் என்பர்.

1914ஆம் ஆண்டில் மிசனரிமார் வங்களாவடிச் சந்தியில் கோயிலும், பள்ளிக்கூடமும் கட்டினர். இதற்குப் பக்கத்தில் விசயரத்தினம் என்பவரின் முயற்சியால் சைவப்பாடசாலை ஆரம்பிக்கப் பட்டது. இப்பாடசாலையிற்றான் மத்திய மகா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. இன்று அதன் அயலில் தனியானதொரு கல்விக்கூட மாகத் திகழ்கின்றது. மற்றும் சுருவில் வீதியில் நடராசா வித்தியாசாலை, வடக்கில் ஆத்திசூடி ஆரம்பப் பாடசாலை, தெற்கில் ஐயனார் வித்தியாசாலை, பெருங்குளம் மகாவித்தியால யம், செட்டிபுலம் ஆரம்பப் பாடசாலை ஆகிய னவும் உள்ளன. வேலணையில் தபால் அலு வலகம், வைத்தியசாலை, கூட்டுறவு சமாசம், கலைகலாச்சாரக் கழகங்களும் உண்டு. போக்குவரத்துக் கடினமாயினும் யாழ்ப்பாண நகரிலிருந்து பேருந்து, வான் போன்றன வரும். இங்கு விவசாயமே பெருமளவில் செய்யப்படு வதாயினும் தோட்டச்செய்கையிலேயே அதிக கவனம் செலுத்தப்பட்டது. வேலணைத் துறை முகம் மீன்பிடித் தொழிலுக்குச் சிறப்புடையது. சாட்டிக்கடற்கரை சுகவாசத்தலத்திற்குச் சிறந்த இடமாகும். இங்கிருந்துதான் புங்குடுதீவு ஊர்கா வற்றுறைப், பகுதிகளுக்குக் குடிநீர் விநியோகி க்கப்படுகின்றது. வங்களாவடி துரிதமாக வளர்ச் சியடைந்து வந்தது. கிராமிய குடிநீர் திட்டத்தின்

கீழ் குழாய்நீர் விநியோக ஒவலைகள் இணைக்கப்பட்டிருந்தது. காசுப்பயிரான புகையிலை தொழிலிலும் பலர் ஊக்கங்காட்டினர். இக்கிராமத்தின் வளர்ச்சிக்கு இக்கிராமத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் பெருங்காரணமாக இருந்தனர். மேலும் பல வர்த்தகப்பெருமக்கள்,கல்விமான்களும் பொறுப்பாவர். பண்டிதர் கா.பொ.இரத்தினம், வி.நவரத்தினம் (கரம்பன்) ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும், கொழும்பு - E.சண்முகம் அன்ட் கொம்பனி V.மாணிக்கம் பிறதேர்ஸ், தினக்குரல் -சாமி குறூப் அதிபர் S.P. சாமி, பிறவுண்சன் இன்டஸ்றீஸ் உரிமையாளர் வேலணை நா. வீரசிங்கம் போன்ற வணிகப் பெருமக்களும் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, செ.பாலச்சந்திரன், இ.சிவச்சந்திரன் ஆகியோர் பேராசிரியர்களாகவும், மற்றும் அமரர். சு.இரத்தினராசா கல்வித்துறையாலும் நினைவுபெறக் கூடியவர்கள். வேலணையுடன் மிக நெருக்கமாக இருந்தவர் பாராளுமன்ற உறுப்பினர் தம்பையா (கரம்பன்) அவர்கள். சோளாவத்தையில் அமரர் சிவலைநாகலிங்கம் ஒரு சமூக சேவையாளர் ஆவார்.

தமிழ் போன்று முத்தான மூன்றெழுத்துக்களால் தீவுகளில் சிறந்து விளங்கிய வேலணை. போரால் பேரழிவுக்குள்ளானது.

இக்கட்டுரை 'பிறந்த மண்ணில் பெற்ற சுகந்தம்' என்ற நூலிலிருந்து பெறப்பட்டது.

## புதிய தேடல்கள்

### மனநிலை மாறுமா?

**அற்புதம்**

சொந்த நாட்டில் சொந்த ஊரில்
வளத்தோடு வாழ்ந்த காலமதில்
எடுபிடிகள்? அதிகம் அப்போ!
அந்திய நாட்டிற்கு அகதியென வந்து
எடுபிடிகளானோம்.
இப்போதும் அடிமைத்தனம், அடக்கி ஆளும்
எண்ணம் அகலவில்லையே !!
என்று இந்த மனநிலை மாறுமோ!
அப்போதே நாம் சுதந்திர மனிதர்களாவோம்
நாடும் சுதந்திரம் அடையும்!
இவை நடக்குமா?
அது எப்போது?

### சிந்தனைச் சிப்பி

**கோ**

சிந்தனைச் சிப்பி இட்ட வழிவழியே
எமது தேசம் விடிவை நோக்கி இருக்கையில்
வேதனைப்பட்டவை படிப்படியே
முள்ளிவாய்க்கால் வரை ஆனதுவே
இதுவே விடியலை நோக்கி விழித்து
நிற்கிறதே!
உலக வல்லரசுகளும் இவ்வழியே விடிவை
கண்டன!

# இசையின் எல்லையை யார்கண்டார்!

இசைமாமணி திரு. கிருபாபரணன்

இசையின் எல்லையை யார் கண்டார்! ஆமாம், உண்மையில் அதன் எல்லையை யாராலும் காணமுடியாதுதான். ஆனால் அதன் உட் சென்று, பலவித நுணுக்கங்களையும், அதன் வடிவங்களையும் நம்மால் உணர முடியும். அது நமது மன ஓட்டங்களின் பாதையை நல்வழியே செலுத்தும், மனம் இன்பமுறும், அமைதிபெறும், நாம் நல்ல விடையங்களை சிந்திக்கவேண்டும், அதை நடைமுறைப்படுத்த வேண்டுமாயின், முதலில் நம்மனம் அமைதி பெறவேண்டும். அதுவே முதற்படி பின்புதான் நம்மால் நல்ல விடையங்களை சிந்திக்க முடியும், பின்பு அதை நடைமுறைப்படுத்தவும் முடியும்.

இசை ஒரு அற்புதம் அது எல்லைகளுக்கு அப்பாற்பட்டது. அது ஒரு மந்திரம் தமிழிசையா கட்டும் அல்லது பிறமொழி இசையாகட்டும், எல்லாமே முடிவில்லாது புதுப்புது வடிவங்களை எடுத்துக்கொண்டே இருக்கிறது. கிராமிய இசை, கர்னாடக இசை, தமிழர்களின் பாரம்பரிய இசை, ஹிந்துஸ்தானி இசை, பக்திஇசை, திரை இசை, இதில் சோகப் பாடல்கள், மனதை தாலாட்டும் காதல் கீதங்கள், வீரப்பாடல்கள், குத்துப்பாடல்கள், எனப் பலவகை உணர்ச்சிகளை வெளிப்படுத் தும். மெட்டுக்களாக உருவெடுக்கிறது. அது மட்டுமில்லாமல், கர்னாடக இசையிலும் சரி, அல்லது ஹிந்துஸ்தானி இசையிலும்சரி, ஒரு இராகத்தை எடுத்து, அதாவது இந்த பன்னிரண்டு ஒலிகளிலிருந்து ஏழுஸ்வரங்களை அல்லது அதற்கும் குறைந்த ஸ்வர பிரயோ கங்களைக் கொண்டு, இசைக்கலைஞர்கள் தம் கற்பனைத்திறமைக்கேற்ப, பலமணிநேரங்கள் அதை இசைக்கக்கூடியதாகவும் இந்த ஒலிகள்



அமைகிறது. ஜாஸ் (Jazz) எனப்படும் இசை யிலும் இப்படி இசைக்கப்படுகிறது. எவ்வளவு ஆச்சரியம்! தேனாக நம் காதுகளில் பாய்கிறது! மனதை உருக்குகின்றதே! மிருகங்களும், பற வைகளும் கூட மயங்குகின்றதே! ஏன்! அந்தப் பயிர்கள்கூட ஆனந்தமாக வளர்வதாக ஆராய்ச் சியாளர்கள் கூறுகிறார்களே!

ஆனந்தமாக இரசிப்பதற்கு ஒருவகை இசை ஆடலுடன் இரசிப்பதற்கென்ற வேறு இசை அமைதிக்கு ஒன்று, உருக்குவதற்கு வேறொன்று, இப்படியாக நமது மனங்களைக் கொள்ளைகொள்ளும் இசையானது, பலவித உணர்வலைகளை நம்மில் தோற்றுவிக்கின் றது, நம்மை மெய்மறக்கச்செய்கிறது. அங்கே வெற்றிடம் உருவாகிறது. அது தவம் ஆகிறது, அதுவே (meditation) என ஆங்கிலத்தில் சொல்லப்படுகிறது. கலைகள் அன்பையும் பண்பையும் வளர்த்து நம்மைப் பக்குவப்படுத்து வதில் மிகவும் முக்கிய பங்கை அளித்துக் கொண்டிருக்கிறது. இதில் சிறப்பாக, இசையா னது எமக்கு எளிதில் எப்போதும் கிடைக்கக் கூடியது ஒய்வு நேரங்களில் மென்மையான இசையை இரசிக்கலாம் வேலைசெய்யும் நேரங்களிலும் இரசிக்கலாம், பயணநேரங்களி லும் இரசிக்கலாம். இப்படியாக இரசிக்கப்பழகு வது. நாம் அந்த இசையை இசைக்க வேண்டுமென ஆவலையும் நமக்குள் தூண்டி

விடுகிறது. அதை நாங்கள் கற்கத் தொடங்கும் போது, பொறுமை, பக்தி, மற்றும் பணிவு என்பனவற்றையும் அவற்றுடன் சேர்த்து கற்க ஆரம்பிக்கின்றோம். அதுவே வெற்றியின் தொடக்கம் ஆகிறது. இப்போது, எங்கும் வன்முறைகளும், அடக்குமுறைகளும் மனிதக்கொலைகளும், மிருகக்கொலைகளும், இயற்கையை அழித்தலும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. ஆண்டவன் படைப்பிலே அனைத்தும் அற்புதம். மனிதன், உயிரினங்கள் இயற்கைக் கலைகள் எல்லாமே அற்புதம். இதில் தவறு எங்கே நிகழ்கிறது? நாமே இந்த தவறுகளை ஆரம்பிக்கின்றோம். சரியான சிந்தனையும், நோக்கமும் இல்லாமையே இதற்குக் காரணம் ஆசைகள் அதிகரிக்க அதிகரிக்க நாம் அனைத்தையும் மறந்து விடுகிறோம். சக மனிதனையும் மனிதனாக மதிப்பதில்லை நாங்கள் அனைவருமே இறைவனின் பிள்ளைகள் என்பதை மறந்துவிடுகிறோம். அனைத்து உயிர்களும் வாழ்வதற்கே ஆசைப்படுகின்றன. என்பதை நாம் நினைத்துப்பார்ப்பதில்லை. எங்களைப்படைத்த அந்த சக்தி இறைவன் என்றால் அவன் படைப்பிலே தோன்றிய அனைவரும் ஒரே குடும்பம்தானே! ஏதேதோ ஆசைகளுக்கு அடிமைப்பட்டு, அமைதியை இழந்து அன்பை மறந்து ஒருவரையொருவர் சாடுகின்றோம். வதைக்கின்றோம். இன்று வாழ்வதில்லை. வரப்போகும் காலங்களை நினைத்து அது வரலாம், வராமலும் போகலாம், அதற்காக இன்றைய நாளை இழப்பது. இது பற்றி நாம் சிந்தித்தால் தான் இதிலிருந்து நல்ல ஒரு விடிவு பிறக்கும். நல்ல மனிதர்களாகவும், இன்பமானவர்களாவும் வாழலாம். முதலில் மனதை வெற்றிடமாக்குங்கள் அமைதி பெறுங்கள் மெல்லிய இசையை படரவிடுங்கள். இறைவன் உங்களுக்குள் புக முற்படுவான்.




SRI MAHALL
காதலுக்கு தாஜ்மகால்
சிரித்த முகத்துடன் தரமான சேவைக்கு
ஸ்ரீ மஹால் பல்பொருள் அங்காடி
SRI MAHALL
PRODUITS
197, Rue du Fbg. St. Denis
75010 PARIS
M° - La Chapelle ou Gare du Nord
Tel: 01 46 07 83 12


S.P TRADERS
ALIMENTATION GENERALE
வீட்டில் நிற்பது போன்ற உணர்வு
ஆனால்
நீங்கள் நிற்பது எஸ்பி ரேடர்ஸ் கடையில்
S.P TRADERS
PRODUITS EXOTIQUES
SPtés AFRICAINES
imentation Générale
S.P TRADERS
197 RUE DU FBG SAINT-DENIS
75010 PARIS
TEL : 01 40 36 53 99



OCEAN TROPICAL
107, Av Pierre Sémard, 95400 Villiers le bel
Tel: 01 39 94 04 00
Fax: 01 39 33 54 87
OCEAN TROPICAL
TEL 01.39.94.04.00
FAX: 01.39.33.54.87
இந்து சமுத்திர கடலுணவுகளின்
இறக்குமதியின் மையம்
ஏசியன் இந்தியன்
PRODUITS EXOTIQUES
OCEAN INDIAN
195, Rue de Fbg St Denis
75010 Paris
tél: 01 42 09 31 50
fax: 01 42 09 31 60
Gare du Nord
-La Chapelle
EXO OCEAN
07, Av. Alexis Varagne
95400 Villiers le bel
tel: 01 34 19 46 97
OCEAN DE LA BEAUTE
3, Av Alexis Varagne
95400 Villiers le bel
tel: 01 39 94 04 00
fax: 01 39 33 54 87